# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை




தமிழக மேலவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட
புலவர் அறிவுடைநம்பி அவர்கள் 22—4—70ல் பதவியேற்ற காட்சி.


விலை 20 காசு

14-6-70

# ?! வினா-விடை

**எம். எல். குப்புசாமி, மாரண்ட அல்லி.**

பாரதியின் பாடலில், "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்று வரும் அடிக்கு உண்மைப் பொருள் யாது? "பள்ளித்தலம்" என்பதற்கு, முகமதியரின் பள்ளிவாசல் எனப் பொருள் கொள்ளல் சரியா?

பள்ளித்தலம் என்கிறபோது பாட சாலை என்றுதான் நாம் அறிந்து வைத்திருக்கிறோம், பாட சாலைகளைக் கோயில்களாக்கி வைத்துவிட்டு, அங்கே குருக்களின் முன்பு நாம் அனைவரும் கைகட்டி நிற்கவேண்டும் என்ற பொருளில் பாரதி பாடி இருப்பாரா? என்பது சிந்தனைக்குரியது. 'கோயில் செய்குவோம்' என்ற சொல்லுக்குக் கிடைக்கும் வெளிப்படையான பொருள், கடவுள்களின் இருப்பிடமாகிய கோயில்களாக்குவோம் என்பதுதான். இந்தப் பொருளை வைத்துக் கொண்டு முஸ்லிம்களின் பள்ளிவாசல்களை கோயில்களாக்கிவிடுவோம் என்று வாதிக்க முடியாது. முஸ்லிம்களுக்கு, அவர்களது ஆண்டவனது இருப்பிடம்தான பள்ளிவாசல். இதனைக் கோயில்களாக்கிவிடவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்குப் பாரதியார் அறியாமை மிக்கவராக இருப்பார் என்று ஏற்கமுடியாது. எனவே பள்ளித்தலம் என்பதற்குக் கிடைக்கும் வெளிப்படையான பொருளையும், பள்ளிவாசல் என்பதனையும் விட்டு விட்டு. ஆழ்ந்தகன்ற முறையில் விளக்கம்பெறவேண்டும். கடவுள்களின் இருப்பிடம் பற்றி காந்தியடிகள் விபசாரத்தின் கூடாரம் என்று துணிவுமிக்க கருத்தறிவித்திருக்கிறார். இந்தக் கருத்து வெளிப்பட்டக் காலத்தில், பாரதியார் உயிருடனேதான் இருந்தார். எழுச்சிமிக்கப் பாடல்களையும் யாத்துக்கொண்டிருக்கத்தான் செய்தார். எனவே காந்தியக் கருத்துக்கு முரண்பட்டதாகவும் அவர் சொன்னார் என்று கொள்ள முடியாது, ஆனால் கோயில்கள் என்பதற்குப் புனிதமான இடம், மனத்தை ஒருநிலைப்படுத்தும் ஒரு இடம்; மேலோன் கீழோன் வேறுபாடற்று ஒரு இடத்தில் கூடி வந்தனை செய்யும் சமதர்மச் சாலை என்று தரப்படும் விளக்கம்போல், கோயிலினை ஒரு புனித பூமி எனப் பொருள் எடுத்துக் கொண்டு, அதற்கொப்ப, அந்தப் புனிதத் தன்மை கைகொள்ளப் படும் அளவுக்குப் பள்ளிகள் — கல்விக் கூடங்கள் புனிதமுடையவையாயிருக்க வேண்டும், இருக்கும்படிச் செய்வோம்! ஆண்டவனுக்கு அடங்கி வரம் கேட்பதுபோல, ஆசானுக்கு அடங்கி அறிவு கேட்போம்! என்ற பொருளைத் தருகிறது—என்று பொருள் கொள்ளலாம்! இப்படிப் பொருள் கொள்வதுதான் பொருத்தமானதாகவுமிருக்கும், நீங்கள் குறிப்பிடுவது போன்று பொருள் கொண்டால், நாமும் இனவெறி, மதவெறிக்கு இலக்காக வேண்டி ஏற்பட்டுவிடும். விரும்பத்தக்க நிலை அல்ல அது,

**தங்க. கலைஅரசு, கருக்குப்பேட்டை.**

தத்துவங்கள் எப்படிப்பட்ட இதயங்களிலிருந்து பிறக்கின்றன? அத்தத்துவங்களை எத்தகைய மனங்கொண்டோர் சிந்திக்கின்றனர்? அத்தத்துவங்கள் செயலுருவம் பெறும்போது என்னென்ன பலாபலன்கள் ஏற்படுகின்றன?

தத்துவச் சிந்தனைகள் என்று சிந்திக்கத் தொடங்கி ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதாகக் கூறப்படுகிறது. முதன் முதலாக இது சிந்திக்கப் பட்டபோது, அது இயற்கையின் அகக்கூறுகளைப் பற்றியும், புறக்கூறுகளைப்பற்றியும் சிந்திக்கப் பட்டதாகக் கூறுகிறார்கள். காலத்தின் மாற்றம் சிந்தனைகளிலும் மாற்றத்தை உண்டாக்கி விட்டிருக்கிறது. எல்லா மனிதர்களுக்கும் அறிவு இருக்கத்தான் செய்கிறது. எல்லா மனிதர்களும் சிந்திக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இந்த எல்லா சிந்தனைகளும் தத்துவச் சிந்தனைகளாகி விடுவதில்லை எந்த சிந்தனைகள், ஆழந்தகன்ற நோக்கத்தோடு வையத்தின் பொதுமை கருதி சிந்திக்கப்படுகிறதோ, அவைகளே மற்றவர்களது சிந்தனைக்குரியதாகவும் ஆகின்றன. கார்ல்மார்க்ஸ் ஈன்றெடுத்தது ஒருவகைத் தத்துவம்! அதிலிருந்து லெனின் உருவாக்கியது இன்னொருவகைத்தத்துவம். சாக்ரடீசும், பிளேட்டோவும் தந்தவை ஒருவகை. ஐன்ஸ்டீனும், பிளாக்கும்தந்தவை இன்னொருவகை. காந்தியடிகளது தத்துவங்களுக்கும், நேருவின் தத்துவங்களுக்கும் வேறுபாடு உண்டு. காமராசரது சிந்தனைக்கும், இந்திராவின் சிந்தனைக்கும் முரண்பாடுகள் உண்டு. எனவே, எப்படிப்பட்டவர்கள் சிந்திக்கிறார்கள்? தத்துவச் சிந்தனைகளைத் தருகிறார்கள் என்று கூறுவது சுலபமல்ல. தரப்பட்டிருப்பனவற்றை எப்படிப்பட்டவர்கள் சிந்திக்கிறார்கள் என்பதும் அப்படித்தான். பல்வேறு சுவைத்தன்மை கொண்ட உலகம் இது. எவரெவர் எந்தச் சுவையில் நாட்டம் கொள்கின்றனரோ, அதற்கொப்ப சிந்தனைகளை எடுத்துவைத்துச் சிந்திக்கின்றனர். ஆயுதமேந்திய புரட்சிபற்றி லெனின் சிந்தித்தது ஒருவகைக்காரணத்துக்காக. ஒருவகைச் சூழ்நிலையின் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தையும் அவசியத்தையும் ஒட்டி. இதே தத்துவத்தை நக்சல்பாரிகள் மேற்கொள்வது எப்படி இருக்கிறது? இவைதான் பலாபலன்கள்! அரசியல் புரட்சி பற்றிய லெனினது சிந்தனைக்கும், அறிஞர் அண்ணா அவர்களது சிந்தனைக்கும் வேறுபாடு புலப்பட்டிருக்குமே! பலன்களும் தெளிவாகத்தானே தெரிகின்றன!

**த. சிவசுப்பிரமணியம், மணச்சநல்லூர்.**

சிண்டிகேடு காங்கிரசார் நடத்தி வரும் மாநாடுகளைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

சிண்டிகேடர்கள் இப்போது நடத்திக்கொண்டு வருவதை 'மாநாடு' தான் என்று நீங்கள் ஏற்றுக் கொண்டா இவ்வினாவை எழுப்பி இருக்கிறீர்கள்?

• • •

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 | ஆறுமாத சந்தா ரூ. 5
மலர் 6 | 14—6—70 | இதழ் 48

# காமராசருக்குத் துணிவு உண்டா?

அடுத்து வரவிருக்கின்ற 1972 பொதுத் தேர்தலைப் பற்றிய கிலியும், விளைவும் இன்று காமராஜருக்கு சிந்தனைத் தெளிவை முழுதாக மாற்றிவிட்டது என்றே நம்பத் தோன்றுகிறது.

ஊருருக்கும் ஓடிப்போய் மாநாடுகளைக் கூட்டிக் கொண்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு அரசியல் அமைப்பாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்கிற சக்தி காமராசருக்கு இல்லாமற் போனாலும், காமராசர் சார்ந்திருக்கிற அமைப்பு—அது நல்லதானாலும், தீயதானாலும் ஒரு அரசியல் நிறுவனம்தான் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதனால், அந்த அமைப்பின் வளர்ச்சிக்கும், நிகழ்ச்சி நடைமுறைகளுக்குமாக, மாநாடுகள் கூட்டுவதும், கருத்துரைகள் ஆற்றுவதும் தவறு என்று நாம் வாதிட வரவில்லை.

மாநாடுகளைக் கூட்டி—வந்திருக்கிற சில பேருக்கு முன்பாக, வார்த்தைகளை உமிழத் தொடங்கி இருக்கும் விபரீதம் பற்றி நாம் அக்கறையற்றிருக்க முடியாது.

காமராசரும் பேசத் தொடங்கிவிட்டார் என்ற நிலை பிறந்தபோது, அந்தப் பேச்சுக்கள் அப்போது முதலே, விபரீதங்களைத்தான் விளைக்கத் தொடங்கியது. அன்று முதல் இன்றுவரையில் மேலும் மேலும் விபரீதங்களை உண்டாக்கிக் கொண்டுதானிருக்கிறது.

1967 பொதுத் தேர்தலில், துணைக் கண்டம் முழுவதுமாக ஒன்பதுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் காங்கிரசுக் கட்சி, தன் ஆட்சி யுரிமையை இழந்து ஆதரவற்று நின்றது. இந்த நேரத்தில் காங்கிரசுக் கட்சியின் அனைத்திந்தியத் தலைவராக காமராசர்தான் இருந்தார் என்பதை, பல சந்தர்ப்பங்களில் அவரே மறந்துவிடுகிறார்.

ஒரு வணிக நிறுவனமானாலும் சரி, அல்லது தொழில் நிறுவனமானாலும் சரி, அது பாழ்பட்டுவிட்டது என்று கூறப்பட்டால், முக்கியமாக அதன் நிர்வாகம் அல்லது நிருவாகத் தலைமை சரிஇல்லை என்று யாரும் எளிதில் கூறிவிடுவார்கள். இந்த இலக்கணம் ஏற்றுக் கொள்ளத் தக்கதுதான் என்றால், காங்கிரஸ் என்ற அரசியல் நிறுவனமும் கெட்டுப் போனதற்குக் காரணம் முழுவதுமாக, அதன் தலைவர் பொறுப்பிலிருந்த காமராசர்தான் என்பதையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

துணைக் கண்டம் முழுவதுமாக காங்கிரஸ் வீழ்ச்சியடைந்து போனதற்குத் தான்தான் காரணம் என்பதை காமராசரால் உணர முடிகிறது. எனவே, மக்கள் அனைவரும் அதனை உணரும் முன்பு, உணர்ந்து கொண்டுவிட்டால், அதன் விளைவுகள் கண்டு அஞ்சி, அந்த உணர்வை மாற்றிவிடவேண்டும் என்பதற்காக என்னென்னவோ செய்கிறார். எவரெவரையோ நாடுகிறார்,

அனைத்திந்தியக் கட்சியாக இருந்த காங்கிரசை உடைத்து, அங்கலாய்த்துக்கொள்ளும் நிலைக்கு இன்று ஆளாக்கியதே காமராசரது உணர்வுதான். இதனை மறைப்பதற்காகவே புதிய புதிய தத்துவங்கள் அல்லது கண்டு பிடிப்புக்கள் என்பதன் பேரால் சொற்களை, அதன் அமைப்பும் ஆழமும் புரியாமல் உதிர்க்கிறார்.

1967ல் மக்கள் தவறு செய்துவிட்டார்கள் என்பதை, புதுவேகத்தோடு புலம்பத் தொடங்கிவிட்டார்.

1967ல் மக்கள் செய்த தவறு என்ன?

தமிழ் நாட்டில், ஆண்டுகொண்டிருந்த ஆணவமிக்கக் காங்கிரசுக் கட்சியை ஆழக் குழி தோண்டிப் புதைத்தார்கள்.

இதுபோல் ஒன்பது மாநிலங்களில் காங்கிரசை பலமான படுகாயத்துக்கு ஆளாக்கினார்கள்.

ஆறு மாநிலங்களில் எதிர்க்கட்சிகளின் ஆட்சியையே அமைத்தனர். மூன்று மாநிலங்களில் எந்த கட்சிக்கும் ஆட்சியுரிமை இல்லை என்ற அளவில் அல்லாட்டத்தை உண்டாக்கினார்கள்.

ராஜஸ்தானத்தில் பொதுத்தேர்தல் நடைபெற்றும் கூட, கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டியுங் கூட, அங்கே குடியரசுத் தலைவரின் ஆட்சிதான் என்ற நிலையை உண்டாக்கினார்கள்!

ஏறக்குறைய துணைக்கண்டத்தின் மக்கள் தொகையில் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் காங்கிரசுக்கு எதிராக மாறிவிட்டிருந்த நிலைமையைப் புலப்படுத்திக் காட்டினார்கள்.

1972 தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. 1967ல் மக்கள் தவறு செய்துவிட்டார்கள் என்பதை அழுத்தமாக, ஆழமாகக் கூறத்தொடங்கி இருக்கிறார் காமராசர்.

மற்ற மாநிலங்களை விட்டுவிடுவோம். தமிழ் நாட்டை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

1967க்குப் பின்பு அமைந்த கழக ஆட்சியில்—

நாடு—தமிழ்நாடு என்று ஆக்கப்பட்டது.
இப்படி ஆகவேண்டும் என்பதற்காக நடைபெற்ற
போராட்டங்கள் பல—தந்த உயிர்கள் பல.

மக்கள் தவறு செய்ததால அமைந்த கழக ஆட்சியின் ஒப்புயர்வற்ற சாதனை இது. இதனைத் தவறு என்று கூற முன்வருகிறாரா காமராசர்? கூறுகின்ற துணிவு அவருக்கு இருக்கிறதா?

1967 க்குப் பிறகு அமைந்த புதிய மாநில
அரசுகளில் பல தம மாநிலத்தில் மதுவிலக்கினை
ரத்துச் செய்திருக்கின்றன.
தமிழ் நாட்டில் காங்கிரஸ்காரர்களைவிடத்
தீவிரமாகச் செயல்படுத்தப்படுகிறது.

—இதனைத் தவறு என்று சுட்டிக்காட்ட முடியுமா காமராசரால்! சுட்டிக்காட்டத் தயாராக இருக்கிறாரா காமராசர்?

காங்கிரசாட்சியில் விளைந்த உணவுப்
பொருட்களைக் காட்டிலும் $1\frac{1}{2}$ மடங்கு அதிக
உணவுப் பண்டங்கள் விளைவிக்கப்படுகின்றன.

(16-ம் பக்கம் பார்க்க)






மன்னராக்கிக்கொள்ளுங்கள்" என்றுகூறிவைத்தான். ஆனால் ஒருவராவது, மலர்புரி அரசிமீது மனத்தாங்கல் கொள்ளவில்லை. ஆரிய நச்சரவுதான் அழிந்தொழிந்ததே, இனியும் ஏன் அரசியார் அஞ்ச வேண்டும் என்று கூறினர். பாண்டியன் சோழனிடம் சவிஸ்தாரமாக, வீரமணி நடனராணி வரலாற்றினைக் கூறினான். சோழன் தமிழ் வீரனும் வீரமணி துரோகியல்ல; துயருற்ற ஒருவருக்குத் துணை நின்றதன்றி வேறு தீங்கிழைக்கவில்லை என்பது தெரிந்து, வீணாக வீரமணியை நாடு கடத்திவிட்டோமே என்று வருந்தி, நெடுநாட்கள் பலவகையான துன்பங்களை வீரமணி அனுபவித்ததும், கொடியிடைக் கோமளம் நடனம், பல பாடு பட்டதும், தனது துலாக்கோல் சாய்ந்ததால்தான் என்பதை உணர்ந்து வருந்தி, வீரமணியிடம் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்பினார். அன்றே அரச சபையில், வீரமணி மீது முன்னர் படிக்கப்பட்ட குற்றப் பத்திரிகையை ரத்துச் செய்ததுடன், சோழன், பாண்டிய மன்னரும் மலர்புரி ராணியும் தயாரித்த திட்டத்தைத் தகர்க்கக் கூடியதான வேறோர் அறிக்கையும் விடுத்தார், மாறு வேடத்துடன் அரச சபையிலே இருந்த பாண்டியன் திடுக்கிட்டுப் போனார். ஆனால் முகமோ புன்னகை மேடையாயிற்று.

"தமிழர்களே! நாம், கலிங்கத்தின்மீது போர் தொடுத்து, அந்நாட்டரண்களைப் பிளந்தெறிந்து மன்னனை முறியடித்து, அந்த மண்டலத்தை நமது ஆட்சியின் மேற்பார்வைக்குட்படுத்தினோம். கலிங்க மன்னன், வாரிசு இன்றி இறந்துபோனான். கலிங்கத்திலே நாம் பெற்ற வெற்றிக்கு முக்கியத் துணையாக இருந்த நமது மறத்தமிழன் வீரமணி, மாசிலாமணி என்பது விளங்கிவிட்டதால், இன்று நாம் நமது வளர்ப்புப் பெண் நடனராணியை வீரமணிக்குத் திருமணம் முடிக்கவும், நடனராணிக்கு நமது நன்கொடையாக கலிங்கத்தைத் தரவும், தீர்மானித்துள்ளோம். வீரமணியும் நடனராணியும் இதுபோது பாண்டிய நாட்டிலே உள்ளனர். அவர்கள் ஒரு திங்களில் இங்கு வருவர். நமது தலைநகரிலே திருமணம் நடைபெறும். மறுகணம் நடனராணி, கலிங்க ராணி என்று பிரகடனம் வெளியிடப்படும். அந்தச் சந்தோஷச் செய்தி கேட்டுத் தமிழகம் மகிழும் என்பதில் ஐயமில்லை. கலிங்கராணி வாழ்க!" என்று மன்னர் அறிக்கை படித்து முடித்தார். கரகோஷமும் ஆனந்த ஆரவாரமும் அடங்கிய பிறகு, பாண்டியன் சோழ மன்னரைத் தனியே அழைத்து 'மலர்புரி அரசியின் மனக்கோட்டையை இடித்துவிட்டீரே" என்றான். "இடிக்கவில்லை. மலர்புரிக்குக் கலிங்கம் வெளி அரணாக இருக்கும். நடனாவும் வீரமணியும் கலிங்கத்தை ஆள்வர். சில காலமானதும், மலர்புரி, பாதுகாப்புக்காகக் கலிங்கத்துடன் இணைக்கப்பட்டு இருநாடுகளும் நடன—வீரக்கோட்டமாகத் திகழும். காலம் இதைச் செய்யட்டும். தாயையும் மகளையும் ஒன்று சேர்க்க, தலையுருட்டும் சண்டை வேண்டாமென்று எண்ணியே நான். உமது திட்டத்துக்குப் பதிலாக வேறு திட்டமிட்டேன். மேலும், பாண்டியனே! ஆரியர் ஆதிக்கம் பரவாது இருக்கவேண்டுமானால், நாம், தனித்தனி அரசுகளாக இருப்பதைவிட, ஓர் கூட்டாட்சி அமைப்பதே நலன் என்று நான் கருதுகிறேன்; கலிங்கமும் மலர்புரியும் மட்டுமல்ல; சேர சோழ பாண்டிய நாடுகளும், எல்லைப்புறமாக உள்ள வடுகர் நாடும் விந்தியம் முதல் குமரிவரை, திராவிடம். இங்கு ஆரியம் புகாதபடி பாதுகாக்க இங்குள்ளவர்கள், ஓர் கூட்டாட்சி அமைக்கவேண்டும். மறத்தமிழரின் தோள் வலி குன்றவில்லை. ஆனால் மனவலி குன்றுகிறது அதைக் காண எனக்குக் கவலையாக இருக்கிறது. ஓர் பலமான கூட்டாட்சி அமைத்துவிட்டால், ஆரியத்தைத்

தடுக்க வசதியாக இருக்கும். இதுபற்றிப் பிறகு யோசிப்போம். இனி பாண்டிய மண்டலத்திலே உள்ள, உனது அண்ணன் மகள் மலர்புரி அரசியின் குமாரி, என் வளர்ப்புப் பெண், நடனுவையும் அவளுடைய நாயகனையும் வரவழைப்போம். மலர்புரிக்கும் ஓலை விடுப்போம்'' என்றுரைத்தான்.

மலர்புரி திரும்பிய பாண்டியன் கூறிய மொழி கேட்ட அரசிக்கு ஓர் விதத்திலே சந்தோஷமும் மற்ரோர் விதத்திலே சோகமும் இருந்தது "என் செய்வது, என் செயல் அப்படி இருந்தது'' என்று கூறினுள்

மறு திங்களிலே, தமிழக மன்னர்கள் முன்னிலையில், நடனு-வீரமணி திருமணம் விமரிசையாக நிறைவேறியது. நெடுநாட்களுக்குப் பிறகு சோழ நாடு வந்த வீரமணிக்குச் சொல்லொணுச் சந்தோஷம். நடனுவுக்கு, அரண்மனையிலே அமோகமான வரவேற்பு, சோழனின் குமாரி, தங்கை நடனுவைக் கண்டு பூரித்தாள்.

திருமணத்தைவிட அதிக விமரிசையாக நடனுவின் முடிசூட்டு வைபவம் இருந்தது. போரால் இளைத்துப்போன கலிங்கம், இனி வளம் பெறும் என்று பலரும் வாழ்த்தினர் முடிசூட்டு விழா முடிந்தது. இசை விருந்து நின்ற பிறகு இரவு நெடு நேரத்திற்குப் பிறகு, கலிங்க ராணியும், கலிங்கத்தை வென்ற வீரமணியும், அரண்மனை நந்தவனத்திலே ஆடிப்பாடிக்கொண்டிருக்கையிலே,

"உனக்கென்னம்மா உல்லாசத்துக்குக் குறை! பாண்டியநாடு தகப்பன் தரணி. மலர்புரி தாய்நாடு. சோழநாடு வளர்ப்புத் தந்தையூர், கலிங்கமோ, உனக்கே சொந்தம்'' என்று வீரமணி கேலி பேசினுன்.

"போ! கண்ணுளா! வீரம்உம்முடையது. விருது எனக்குக் கிடைத்தது. ஆனுல் அன்று, நான் முதன் முதலாக என் தாயை, மலர்புரி அரசியைச் சந்தித்தேனே. நமது திருமணத்திற்கு முன்னுள். அன்று இருவரும் அழுத கண்களின் சிகப்பு என்றுமே மாருது. உலகுக்குநாங்கள் வேறுவேறுதானே! இதுபோல எங்கு உண்டு? தாயை மகள் அறியாமல் எத்தனைக் காலம் தவித்தாள்; அறிந்தும் பிரிந்தே வாழ்ந்தாள் என்று உலகம் கூருதோ, என்ன வாழ்வு இது! அன்று என் அன்னை என்னை அணைத்து உச்சி மோந்து முத்தமிட்ட போது, எனக்கு இரு கண்களிலும் நீரருவி கிளம்பிற்று. இன்றும் அதனை எண்ணினுல் என்னுல் துக்கத்தை அடக்க முடியவில்லை'' என்று நடனு சோகத்துடன் கூறினுள்'

"கலிங்கராணியாரே! சோகத்தைப் போக்க மருந்துண்டு தெரியுமோ'' என்று வீரமணி வேடிக்கையாகக் கேட்டான். கேட்டுவிட்டு, கண்களை மூடிக்கொள், என்று கெஞ்சினுன். கலிங்கராணியின் கண்களும் மூடின. துடித்துக்கொண்டிருந்த வீரமணியின் இதழும் நடனுவின் கனியிதழைக் கவ்வின!

முற்றிற்று.

## தேள் கடியும் பாம்புக் கடியும்

இந்தியாவில் பாம்புக் கடியால் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இறக்கின்றனர். பல கிராமங்களிலும் நகரங்களிலும் நூற்றுக்கணக்கான மக்கள் நாள் தோறும் தேள்களால் கொட்டப்பட்டு கொடிய வலியால் அவதியுறுகின்றனர். ஆகையால் தேள் கடியாலும், பாம்புக்கடியாலும் ஏற்படும் விஷத்தை நீக்க சிறந்த மாற்று மருந்து ஒன்று எல்லாக் கிராமங்களிலும் கிராம வாசிகளாலேயே எவ்வித பயமும் இன்றி பயன் படுத்த வசதி செய்வது பெரும் வரப்பிரசாதமாக இருக்கும்.

'சுகநாசா' என்று சமஸ்கிருதத்திலும் 'கிளிமூக்குக் கொன்னை' 'புலிநாகக்கொன்னை' என்று தமிழிலும் 'குரோடாலேரியா லாபர்னிஃபோலியா' என்று தாவர வல்லுனர்களாலும் அழைக்கப்படும் தாவரத்தின் விதைகள் மேற்கூறிய தேவையை நன்கு பூர்த்தி செய்யும். இச்செடியை ஒவ்வொரு வீட்டின் கொல்லையிலும் மிகவும் எளிய முறையில் செலவு அதிகமின்றிப் பயிரிடலாம். இச்செடியிலிருந்து ஒரு விதைவிடும் காலத்தில் கிடைக்கும் விதைகளில் பாம்புக் கடிகளுக்கு 200 முதல் 300 விதைகளும், தேள்கடிக்கு 12 விதைகளும் சிகிச்சை செய்ய போதியனவாக இருக்கும். மேலும் இச்செடியின் மஞ்சள் மலர், தோட்டத்தை அலங்கரிக்கவும் பூஜைக்கு வைக்கவும் உதவும். இச்செடியின் நிழலில் களைகள் வளரமாட்டா.

இவ்விதைகள் கடைகளில் கிடைக்காது. இவற்றைப் பெற விரும்புபவர்கள் இச்செடியைப் பயிரிட வேண்டும். இவ்வாறு பயிரிட வசதி உடைய ஒவ்வொருவரும் குறைந்தது இரு செடிகளையாவது பயிரிட்டு பொது மக்களுக்கு பயன்படும்படி செய்யவேண்டும்.

தேள் கடியை குணப்படுத்துவதற்கு கொட்டிய தேளின் உருவத்தைப் பொருத்து 6 முதல் 15 விதைகளை 4 முதல் 10 (அதாவது விதைகளின் மூன்றில் இரண்டு பங்கு) மிளகுடன் தண்ணீரைச் சேர்த்து அரைத்து விழுங்க வேண்டும். சிறிது அளவு மருந்தைக் கடித்த இடத்தில் தேய்க்க வேண்டும். எலிக்கடிக்கும் சிலந்திக் கடிக்குங்கூட இதே சிகிச்சையைச் செய்யலாம்.

பாம்பு கடித்தால் முதலில் கடித்த இடத்தைச் சுற்றி ஒரு துணியைக் கட்டவும். பாம்பின் வகையையும் விஷத்தின் கொடுமையும் பொருத்து 60 முதல் 300 வரை விதைகளையும் 40 முதல் 200 (விதையின் அளவில் மூன்றில் இரண்டு பங்கு) மிளகுகளையும், தண்ணீரை ஊற்றி நன்ருக அரைத்து ஒரு தடவையிலோ அல்லது இரண்டு தடவைகளிலோ விழுங்க வேண்டும் கடித்த இடத்தின் மீது சிறிது மருந்தைத் தேய்க்கவேண்டும்.

உணவோ அல்லது வேறு வேலைகளிலோ எத்தகைய பத்தியத்தையோ அல்லது கட்டுப்பாடுகளையோ அனுசரிக்க வேண்டியதில்லை. இம்மருந்தைப் பயன்படுத்துவதால் எத்தகைய விபரீதமான விளைவுகளும் ஏற்படமாட்டா.

குறிப்பு:— இந்த செடியைப் பயிரிடவோ அல்லது அவசர சிகிச்சைக்கு மேற்படி விதைகள் கைவசம் வைத்துக் கொள்ள விரும்புவோர் (20 பைசா, ஸ்டாம்புடன்) எஸ். ஏ. பி. வரதன், 43, பச்சரிசிக்காரத் தெரு, மதுரை, 1-க்கு எழுதவும்.

# நனைந்த கற்பூரம்!

## என் மனைவி எத்தனை அழகு தெரியுமா? நேரில் வந்துபார்! என்றான் நண்பன். அவளை நேரிலே கண்டபோது......?

[பேராசிரியர் மு. உலகநாதன்]

இணைபிரியா நண்பன் என்ற காரணத்தால்தான் தன் மனைவி கமலத்தைப் பற்றி இளங்கோ வருணித்துக் கொண்டிருந்தான். கார்காலத்துத் தோகை மயிலின் சாயலைப் பார்த்தால் அது அவள் அழகைக் கண்டு வெட்கித் தலை குனியும். நீர் நிலையில் நீந்திவிட்டுக் கரையேறி நடக்கும் அன்னம் அவளது நடையைக் கண்டால் தன் நடைக்கு வெட்கப்படும், பூவில் மொய்க்கும் வண்டுகள் அவள் கண்ணைக் கண்டு தோற்றோம் தோற்றோம் என்று பாடும். காவில் திரியும் மானினமும் அவ்வாறே மருண்டு நோக்கும். முல்லை அரும்பு போன்ற முத்துப் பற்கள். காமன் தன் வில்லை ஒத்த அழகிய புருவம். பிறை வடிவமான நெற்றி. அதில் சுருள் சுருளாக அலைபாய்கின்ற கூந்தல். பொன்னை உருக்கிவார்த்த சிலைபோன்ற கட்டுடல். சுருக்கமாகச் சொன்னால் வானுலகமங்கை. இதுதான் எனக்கு வாய்த்த மனைவியின் தோற்றம். அவளை நான் அடைந்ததற்குப் பெரும் பேறு பெற்றேன் என்று தான் சொல்ல வேண்டும். அவள் அழகில் மட்டுமல்ல அறிவிலும் குணத்திலும்கூட ஒப்புயர்வற்றவள். நீயே ஒருமுறை என் வீட்டிற்கு வருகின்றபோது நான் சொன்னவைகளை உண்மையென்று தம்புவாய். நாம் இருவரும் சந்தித்து வெகுநாட்களாகிவிட்டது. ஒருமுறை நீ என் வீட்டிற்கு அவசியம் வரவேண்டும்என்று பொறிந்து தள்ளிய இளங்கோ பின்புதான் டேய்! என்னடா உன்கதை என்ன வாச்சு? உன் வீட்டுக்காரி எப்படி என்று அவனைப் பற்றிய விபரங்களைக் கேட்கத் தொடங்கினான்.

எங்கோ ஒரு உலகத்தில் இருந்து திரும்பியவனைப் போல இளங்கோவின் கைகள் தன் தோளில் பட்டவுடன் தான் முத்து சுய உணர்வு பெற்றான். உம்! என்ன கேட்டாய்? என்று முத்து கேட்டவுடன் என்னப்பா! எந்த உலகத்தில் இருக்கிறாய்? என்று இளங்கோ அவனைக் கேலி செய்தான்.

பின்பு இரண்டு நண்பர்களும் பக்கத்தில் இருந்த சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று தேனீர் அருந்தினர். மனம்விட்டுப்பேசினர். கல்லூரியில் படிக்கும் பொழுது இதுபோன்று அவர்கள் இருவரும் சேர்ந்தே எங்கு சென்றாலும் செல்வார்கள். இரட்டையர்கள் என்றே அவர்களுக்கு அங்கு பெயர் அப்படிச் சென்றால்தான் மற்றவர்களுக்கு அவர்களைப் பற்றிய அடையாளம் புரியும்.

மாலை மணி ஐந்தானது. டே! முத்து கட்டாயம் ஒருமுறை என் வீட்டுக்கு வரவேண்டும் மறந்துவிடாதே! என்று விடை பெற்றுக்கொண்டு இளங்கோ தன் மிதிவண்டியில் ஏறித் தன் வீடு நோக்கிப் பறக்கவிட்டான். அவன் மனம் மகிழ்ச்சியால் திளைத்தது. வெகு நாட்களுக்குப் பின் சந்தித்த நண்பனது இனிய நினைவுகள் அவன் மனத்தில் ஊடாடிக் கொண்டேயிருந்தது.

முத்து எதிர்த்திசையில் சென்றுகொண்டிருந்தான். அவனது உள்ளமும் அவ்வாறே அலைபாய்ந்து கொண்டிருந்தது. சே! சே! என்று அவன் வாய் முணு முணுத்துக் கொள்ளும். அடுத்த கணம் யாருக்குத் தெரியப்போகிறது. தெரியாமல் தான் காரியத்தை முடிக்கவேண்டும் என்று கூறிக்கொண்டான். வீடு வந்து சேர்ந்ததுகூட அவனுக்குத் தெரியவில்லை. நேரே அறையில் சென்று சோர்ந்து படுத்துக் கொண்டான். அன்போடு என்னவென்று விசாரித்த மனைவியைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை. காரணமில்லாமல் அவளிடத்துச் சீறி விழுந்தான். அவளும் பயந்து கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

படுக்கையில் படுத்துக் கிடந்த முத்து இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் புரண்டு புரண்டு படுத்தான். படுக்கையை விட்டு எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவினான். இரவு முழுவதும் உறங்கவே இல்லை. அவன் கண்கள் கோவைப் பழம் போலச் சிவந்திருந்தது.

காலை ஒன்பதரை மணிக்குச் சரியாக முத்து அலுவலகத்திற்குக் கிளம்பிவிட்டான். அவனது மிதிவண்டி அலுவலகத்திற்கு நேரே செல்லாமல் அந்தப் பெரிய நகரில் சந்து பொந்துகளையெல்லாம் அளந்த பின் முடிவாக இளங்கோவின் வீட்டின் முன்னால் கொண்டு வந்து நிறுத்தியது.

காலை மணி பதினொன்று. இளங்கோ, இளங்கோ என்றுகதறிக் கொண்டே அடைத்திருந்த கதவினைத் தட்டினான். யாரென்று கேட்டுக்கொண்டே கமலம் கதவினைத் திறந்தாள், அவள் யாராவது காய்கறிக்காரன் கதவினைத் தட்டியிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டுதான் கதவினைத் திறந்தாள், ஆனால் யாரோ ஒரு ஆடவன் நிற்பதைப் பார்த்து நீங்கள் யார்? யாரென்று தெரியவில்லையே என்று இழுத்தாள். அத்தோடு அவரும் அலுவலகம் சென்றிருக்கிறார் என்று கூறினாள்,

மன்னிக்கவேண்டும். என் பெயர் முத்து நேற்றுத்தான் இளங்கோவைச் சந்தித்தேன். அவரிடம் ஒரு முக்கிய காரியமாக வந்தேன். கொஞ்சம் நேரமாகி விட்டது. எதற்கும் அவன் இருக்கின்றானா என்று கேட்டுவிட்டுப் போகலாம் என்பதற்குத்தான் கதவைத் தட்டினேன் என்றான் முத்து.

முத்துவா? வாருங்கள்; வாருங்கள்; நேற்றுத்தான் அவர் உங்களைப் பற்றிச் சொன்னார். நீங்கள் இருவரும் கல்லூரித் தோழர்கள் என்று கூறி கூடத்தில் இருந்த நாற்காலியில் அமரச் செய்து அப்படி என்ன அவசரம்? செய்தியைச் சொல்லுங்கள் வந்தவுடன் சொல்லிவிடுகின்றேன் என்று கூறினாள்.

முத்துவின் மனதில் நேற்று மாலை இளங்கோ கமலத்தைப் பற்றி வருணித்தவை அனைத்தும் உண்மையென்று பட்டது, முட்டாள். அவள் பேச்சு அதனிலும் மேலாகத் தேன் போன்று அல்லவோ இருக்கின்றது. அதைச் சொல்லவில்லையே என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டான்.

கமலம் மீண்டும் கேட்டாள். முத்து ஏதும் கூறாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வை அவளுக்குச் சுருக்கென்று தைத்தது. தன் கணவனில்லாத

நாட்டுக்குப் பெருந்தொண்டு கணக்காய் வாழ்தல்
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம்
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு
ஒன்று இரண்டா உரைத்திடவே முடியாது
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து
பாரினில் பெருந்தொண்டாம் குடும்பநலம் போற்றிடுவோம்

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை — ஆரம்ப சுகாதார நிலையம் — குடும்பநலத் திட்ட நிலையம் ஒன்றை அணுகி தேவையான தகவல்களைத் தெரிந்து செயல்படுங்கள்.

வெளியீடு:
சுகாதாரம்-குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6.

வேளையில் வேற்று ஆட்வனை உள்ளே அனுமதித்த தன் தவறு அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. படித்தவர்கள் பண்போடு நடப்பார்கள் என்ற கருத்தில் உள்ளே அனுமதித்தது எவ்வளவு பெரிய தப்பு என்பதை உணர்ந்தாள்.

அவள் உடலில் ஒரு நடுக்கம் பிறந்தது. அதைச் சமாளித்துக் கொண்டு சீறுகின்ற பெண்புலிபோல் யார் நீ? என்று அதட்டினாள்.

அவள் வார்த்தையில் மரியாதை குறைந்தது. அவன் பார்வையில் பேதம் வளர்ந்து கொண்டே போனது. முத்துவேதான்; நான் உன் கணவனின் நண்பன்தான். உன் அழகைப் பற்றி அவன்தான் என்னிடம் சொன்னான், அதனால்தான் உன்னிடம் ஓடிவந்தேன். அவன் சொன்னதெல்லாம் கொஞ்சம், ஆனால் நான் காண்பதோ வேறு என்று அவன் உளறினான்.

அட! துரோகி! நண்பனுக்குத் துரோகமா? நண்பன் மனைவியைப் பெண்டாள எண்ணியா இங்கு வந்தாய்? போய் விடு; இல்லையேல் ஊரையெல்லாம் சத்தம் போட்டுக் கூப்பிடுவேன் என்று சீறினாள்.

கூப்பிடு; நன்றாகக் கூப்பிடு, அதற்குப் பயந்தால் நான் இங்கு வந்திருக்கவே மாட்டேன். கேவலம் உனக்குத்தான், எனக்கில்லை என்று மிரட்டினான். ஐயோ என்னை விட்டு விடு உன் காலில் விழுகின்றேன், நீ செய்யும் காரியம் பாபமில்லையா? நண்பன் மனைவி உடன் பிறந்தவள் இல்லையா? என் வாழ்க்கையைப் பாழாக்கி விடாதே கெஞ்சிக் கேட்கின்றேன் என்று கமலம் பேசிய பேச்சுக்கள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போலானது.

சத்தியமாகச் சொல்லுகின்றேன். என்னைத் தொடுவாயானால் நான் தற்கொலை செய்து கொள்வேன். காம வெறி பிடித்துக் கொலைகாரனாக மாறாதே; போய்விடு! போய் விடு! என்று கமலம் கதறினாள். அவனிடம் இருந்து தப்பித்துக் கொள்ள கமலம் புலியிடம் சிக்கிய மானாக இங்கு மங்கும் ஓடினாள். கூவினாள். அவள் வாயில் துணி ஒன்றை வைத்து முத்துசத்தமிடாது செய்தான். அவள் மயங்கி விழுந்த வேளையில் அவன் காரியம் முடிந்தது.

மாலையில் வீடுவந்த இளங்கோ கமலத்தைக் காணாது இங்குமங்கும் தேடினான். மேசையின்மீது ஒரு கடிதம்வைக்கப்பட்டிருந்தது. அதில் "உங்கள் வருணனை என் கற்புக்குக் கொள்ளை. உங்கள் முத்து ஒரு நயவஞ்சகன்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இளங்கோ கத்தி ஒன்றை எடுத்துக்கொண்டு வெளியே ஓடினான். அதுபோல் கமலத்தின் பிணம் அவ்வூர் ஆற்றின் கரையிலே ஒதுக்கப்பட்டுக்கிடந்தது. அவள் நனைந்த கற்பூரமாகக் கிடந்தாள்.

★



# தலைவர் கருணாநிதி

—ஏ. கே. வில்வம்—

மலர்கள் எல்லாமே மணமுள்ளவைகள் தான் என்று கூறமுடியாது.

மணமற்ற மலர்களும் உண்டு.

அதுபோல — தலைவர்கள் என்றாலே புகழுக்குரியவர்கள் என்று பொருளாகிவிடாது.

காரணம், புகழுக்கும் தங்களுக்கும் துளியும் சம்மந்தமில்லாத பல தலைவர்களை பொதுவாழ்வில் நாம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம்.

பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்ற பொதுஜனம்பலமும் அந்த கூட்டம் முடிகின்றவரை தலைவர்தான்.

பத்துபேரைக் கூட்டிவைத்து பஞ்சாயத்துப் பேசுகின்ற பரமசிவமும் —பஞ்சாயத்து முடிகின்ற வரை அங்கே தலைவர்தான். 'தலைவர்' என்ற அடைமொழியால் சில 'பெயர்ச் சொற்கள்' — தகுதியைப் பெறுகின்றன.

சில 'பெயர்ச் சொற்களோடு' இணைவதால் 'தலைவர்' என்ற அடைமொழி சிறப்பெய்துகிறது. இதுதான் உண்மை.

பழைய பேப்பர் விற்பனை செய்வோருக்கும் ஒரு சங்கம் இருக்கிறது. அதற்கும் ஒரு தலைவர் இருக்கிறார்.

பாத்திரம் தேய்ப்போருக்கும் ஒரு அமைப்பு இருக்கிறது. அதற்கும் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுகிறார்.

ஓட்டல் தொழிலாளர்களுக்கும் ஒரு தலைவர், ஓட்டை உடைச்சல் செம்பு பித்தளை வியாபாரிகளுக்கும் ஒரு தலைவர், ஓலைக்குடிசையினருக்கும் ஒரு தலைவர், ஆலைத் தொழிலாளர்களுக்கும் ஒரு தலைவர், ஆலமரத்தடி கிளி ஜோசியர் சங்கத்திற்கும் ஒரு தலைவர், வேலையில்லாதோர் சங்கத்திற்கும் ஒரு தலைவர், இத்யாதி...இத்யாதி!

இப்படித் தலைவர்கள் இல்லாத சங்கங்களோ-தலைவர்கள் இல்லாத அமைப்புகளோ எங்கும் கிடையாது.

இந்தியப் பேரரசின் ஜனாதிபதிக்கும் 'தலைவர்' என்றுதான் அடைமொழி.

இங்கிருக்கும் கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டில் நடைபெறும் இரங்கல் கூட்டத்திற்கு தலைமை வகிப்பவருக்கும் அந்த நேரம்வரை 'தலைவர்' என்றுதான் பட்டம்.

எனவே 'தலைவர்' என்று அடைமொழி தன்னோடு இணைத்துக் கொள்ளும் பெயர்ச் சொல்லைப் பொறுத்துதான் தகுதியினைப் பெறுகிறது என்கிறேன்.

அந்த சொல்லுக்கென்று ஒரு தனித் தகுதி இருப்பதில்லை. இருக்கிறது என்றால், அது தன்னோடு இணைத்துக்கொள்ளும் 'பெயர்ச் சொற்களைப்'பற்றிப்பரிசீலனை செய்து பார்க்காதா?

'பூ' என்று சொன்னவுடனேயே பூவையர் எடுத்துத் தலையில் சூடிக் கொள்வதில்லை,

எந்த பூ—என்னபூ என்று பார்த்த பிறகே கூந்தலில் குடியேற்றுகின்றனர். காண்கின்றோம் தினம் தினம்! ரோஜாவும் 'பூ' தான்! எருக்கனும் பூதான்.

'பூ' என்ற சொல் இணைந்துவிட்டதாலேயே எருக்கனை எடுத்து எந்த மங்கையும் தலையில் வைத்துக் கொள்வதில்லை.

பூ' என்ற அந்த எழுத்து— ரோஜாவோடு சேரும் போதுதான் மதிப்புப் பெறுகிறது, மாதரின் கார் குழலை இருப்பிடமாக்கிக்கொள்ளுகிறது.

அது போலவே-'தலைவர்' என்று சொன்னவுடன் நாம் தலை வணங்கி விடுவதில்லை.

எந்தத் தலைவர் என்று கேட்கிறோம்.

இந்தக் கேள்வியில் இருந்தே— தலைவர் என்ற சொல்லுக்குத் தனி மரியாதை இல்லை என்பதும்— அது தன்னோடு இணைத்துக்கொண்டுள்ளவரின் பெயரைப் பொறுத்தே கௌரவத்தினைப் பெறுகிறது என்பதும் தெளிவாகிறது.

நமது இயக்கத்தைப் பொறுத்தவரை தலைவர் என்ற அடைமொழி —அது தன்னோடு இணைத்துக் கொண்ட பெயர்களைப் பொறுத்து புதுப் பொலிவையும் புதுப் பொருளையும், புதுச் சிறப்பினையும் பெற்றிருக்கிறது. முதல் தலைமுறையில் பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் தலைவராக ஏற்றுக்கொண்டோம். சிறிது சிறிதாக மாற்றுக்கட்சியினரும் அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டார்கள். பிறகு இந்த நாடே அவரைத் தலைவராக அங்கீகரித்துக் கொண்டது. அவரின் கடைசி நாட்களில் இந்தத் துணைக்கண்டமே அவரை தலைவர் என்று ஒப்புக் கொண்டது.

தலைவர் என்ற சொல் அண்ணாவின் பெயரோடு இணைந்ததால் அது பெற்ற தனிச்சிறப்பு மகத்தானது.

தலைவர் என்ற அடைமொழியால் அண்ணாவுக்குப் புது அந்தஸ்து வந்துவிடவில்லை. அண்ணா என்ற பெயரால் தலைவர் என்ற சொல் தகுதி பெற்றது.

இது இரண்டாம் தலைமுறை.

அண்ணா வீற்றிருக்க அன்று எத்தனை இதயங்கள் சிம்மாசனமாக மாறினவோ — அத்தனை இதயங்களும் இன்று கலைஞர் கருணாநிதியவர்களை ஏற்றுக்கொள்ள மலர்ந்து விட்டன.

அண்ணா என்ற திருப் பெயரை உச்சரிப்பதில் எத்தனைக் கோடி நாக்குகள் தித்திப்பை சுவைத்தனவோ—அத்தனை நாக்குகளும் இன்று கலைஞர் கருணாநிதி என்ற திருப் பெயரை உச்சரிப்பதில் பெருமிதம் கொள்ளுகின்றன.

அண்ணன் இட்ட கட்டளைகளை செய்து முடிக்க அன்று எத்தனை திண்தோள்கள் காத்துக் கிடந்தனவோ அத்தனையும் இன்று கலைஞர் கருணாநிதியவர்களின் ஆணைகளை நிறைவேற்றி வைப்பதற்குச் சித்தமாய் அணிவகுத்து நிற்கின்றன,

அண்ணாவின் முடிவுகள் எதுவானாலும் அவைகள் மறு பரிசீலனைக்கு அப்பாற்பட்டவை என்ற முழு நம்பிக்கையுடன் அந்த முடிவுகளை வேதவாக்காக ஏற்றுக்கொள்ள எத்தனை லட்சம் இதயங்கள் சம்மதம் தெரிவித்தனவோ — அத்தனை லட்சம் இதயங்களும் இன்று கலைஞரின் முடிவுகளை காரண காரியம் கேட்காமல் ஏற்றுக்கொள்ள ஒருமித்து விட்டன,

இந்த நிலை ஒன்றே — தலைவர் கருணாநிதியவர்கள் கழகத்தில் 'அண்ணாவின் அடுத்த நிலைக்குரிய பெருந்தலைவர் என்பதற்கு வில்லங்க மற்ற நிருபணமாகி விட்டது.

எனவேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் தலைமுறைக்குரிய பெருந்தலைவர் என்றும், கலைஞர் கருணாநிதியவர்கள் இரண்டாம் தலைமுறைக்குரிய அருந்தலைவர் என்றும் நான் வெளிப்படையாகவே கூற விரும்புகிறேன்.

அண்ணா—ஞாயிறாக இருந்தார். கலைஞர் திங்களாக ஒளி சிந்துகிறார்.

ஞாயிறுக்கு அடுத்தது திங்கள்! அறிஞருக்கு அடுத்தவர் கலைஞர்!

ஞாயிறின் ஒளியைப் பிரதிபலிப்பது திங்கள்! அறிஞரின் வழியைக் கடைபிடிப்பவர் கலைஞர்!

ஞாயிறுக்கும் திங்களுக்கும் விண்வெளி ஈர்ப்பு உறவு உண்டு.

அறிஞருக்கும் கலைஞருக்கும் கழக வரலாற்றில் இணைப்பு உறவு உண்டு.

ஞாயிறும் திங்களும் விண்ணகத்தின் இரு கண்களாகவே கருதப்படுவதில் விந்தையில்லை, 'கண் இரண்டும் ஒன்றையே காண்' என்பது போல—இந்த 'இரண்டு கண்களும்' 'கழக வளர்ச்சி' என்ற ஒன்றினையே காண்கின்ற தன்மையினைப் பெற்றவை.

எனவே கலைஞர் கருணாநிதியவர்கள்—இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்று மட்டுமல்லாமல் தமிழகத்தின் தலைவராகவும் மதிக்கப்பட்டு வருகின்றார்.

தமிழகத்தின் தலைவர் என்பதால் அவர் பெற்ற சிறப்பைவிட, கலைஞர் கருணாநிதி அந்நிலைக்கு உயர்ந்ததால் தமிழகத்தின் தலைமைப் பதவி உயர்வினைப் பெற்றிருக்கிறது என்பதுதான் உண்மை.

அளவிடற்கரிய அறிவாற்றல் மிக்க அண்ணா அவர்கள் வீற்றிருந்த அந்த சிம்மாசனத்தில் அவருக்குப் பின்னால் யாரை வீற்றிருக்கச் செய்வது என்ற குழப்பத்திற்கே இடம் இல்லாமல் — அதற்குரியவர் கலைஞர் கருணாநிதிதான் என்ற ஒருமித்த முடிவு எழுந்தது.

இதற்குக் காரணம் அண்ணா இல்லாத நேரத்தில் "கலைஞர்தான் நமக்கு எல்லாமுமாக இருப்பவர்" என்று கழகத்தாரிடையே உறுதிப்பட்டுவிட்ட நம்பிக்கைதான்!

அந்த நம்பிக்கைக்கு எல்லாவகையிலும் பாத்திரமானவராக இருந்தார் நமது கலைஞர்.

இன்றைக்கு கட்சியின் தலைவராகவும் ஆட்சியின் முதல்வராகவும் கருணாநிதி அவர்கள் திகழ்கிறார்கள் என்றால்—நம்மில் நாலு பேர் கூடி ஏதோ தாராள மனதுடன் போனால் போகட்டும் என்ற தாட்சண்யத்திற்காக, அவரை அந்த இடத்தில் அமர்த்தியிருக்கிறோம் என்ற அர்த்தமல்ல.

அப்படி எண்ணிக் கொள்வதை விட வடிகட்டிய ஏமாளித்தனம் எதுவும் இருக்க முடியாது என்பது என் கருத்து.

அந்த இடத்தில் அமர்வதற்குரியவர் அவரைத் தவிர வேறு எவருமில்லை என்பதை உணர்ந்த பிறகுதான்—அவரை வற்புறுத்தி வலுக்கட்டாயப்படுத்தி அவரின் இரு தோள்களிலும் — கட்சித் தலைமை, ஆட்சித் தலைமை, என்ற இரண்டு சுமைகளை ஏற்றிவைத்து செயல்படுங்கள் என்று நிர்ப்பந்தப்படுத்தியிருக்கிறோம்.

உண்மை இதுதான். இதை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதில் நாணயக்கேடு எதுவும் வந்துவிடாது

ஒப்புக்கொள்ள முந்தும் மனதை இழுத்துப் பிடிக்கும்போது தான், சோர்வும் — சரிவும் தொத்து நோயைப்போல ஒட்டிக் கொள்ளுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தீபச் சுடர்—தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும் ஒளிக் கிரணங்களைப் பரப்பிக் கொண்டிருந்த வேளையில் — அதை ஏற்றிய கரம் தான் ஏந்திக் கொண்டிருந்தது.

காலக் கொடுமையால் அந்த வலிமை மிக்க கரம்—இந்த நாட்டு மக்களின் இதயங்களையே ஏந்திக் கொண்டிருந்த கரம் — மரத்துப் போய் துவண்டு விழுந்தது.

அந்தக் கரம் அதுவரை ஏந்தி ஒளிகாட்டிக் கொண்டிருந்த தீபச் சுடரை அணைத்துவிடாமல் காத்திட நீண்ட அடுத்த கரம்தான், கலைஞர் கருணாநிதியவர்களின் சக்தி மிக்க கரமாகும்.

ஏற்றிய கரம் அசைவிழந்து போனாலும்—எரிந்து கொண்டிருந்த தீபம் அணையவில்லை.

அணையாமல் காப்பாற்றப்பட்டு விட்டது!

தீபம் அணைந்துவிடக் கூடாதே என்று தினம் தினம் துடித்துக் கொண்டிருந்த லட்சக்கணக்கான கழகத் தோழர்களின் உள்ளங்கள் இன்று குளிர்ந்துவிட்டன.

அண்ணா ஏற்றிய தீபத்தை அணைந்து விடாமல் காத்திட முன் வந்த கலைஞரின் கரத்திற்கு தோள் கொடுக்க துணை இருக்கப் பல லட்சம் கரங்கள் இன்று நேச நினைப்போடு நீட்டப்பட்டிருக்கின்றன.

புது யுகத்தின் முதல் தலைவராக கலைஞர் கருணாநிதியவர்களின் பெயரை — கழகம் கூட்டுக் குரலில்

உலகத்திற்குப் பிரகடனப்படுத்தித் தன் பெருமையை நிலை நிறுத்திக் கொண்டது.

இந்தச் செய்தி செவிகளில் விழுந்தபோது 'டில்லி உமிழ் நீரை ஒருமுறை கூட்டி விழுங்கிக்கொண்டது.

சன்னலைத் திறந்து வைத்துக் கொண்டு என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்த நல்லெண்ணக்காரர்கள் அசைந்து கொண்டிருந்த் தங்கள் இதயங்கள் அறுந்து விழாமல் இருப்பதற்காக ஒருமுறை அழுத்திப்பிடித்துக் கொண்டனர்.

'முடிந்தது கழகத்தின் கதை என்று அசைப்போட்டு மகிழ்ந்தவர்கள்—தொடர்ந்ததே புதுவேகத்தோடு' என்று அங்கலாய்த்துக் கொண்டனர்.

இப்படிக் கருணாநிதியவர்களின் தலைமை—அரசியல் வட்டங்களில் விதவிதமான ரசாயன மாற்றங்களை உருவாக்கிவிட்டது.

இத்தகைய ரசாயன மாற்றங்கள் நமக்குப் புதிதாகப் படலாம் ஆனால் வரலாற்றுக்குப் புதிதல்ல.

ரோம் நாட்டுத் தலைமைக்கு சீசர் உயர்ந்தபோதும் — அங்கே இத்தகைய ரசாயன' மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

கார்சிகா நாட்டு இளம் வீரன் நெப்போலியன், பிரஞ்சு நாட்டு சிம்மாசனத்தில் ஏறி உட்கார்ந்திருந்தபோதும்—அந்த மண்ணிலே இப்படிப்பட்ட 'ரசாயன மாற்றங்கள் உருவாகாமல் இல்லை.

ஆனால்......

சீசர் இல்லாத ரோம் நாட்டுச் சரித்திரமோ—நெப்போலியன் இல்லாத பிரஞ்சு நாட்டு வரலாறோ—வெளிவந்திருக்கிறதா?

எனவே கலைஞர் கருணாநிதியவர்களின் தலைமை—சூடும் சுவையும், விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த தலைமையாக அமைந்துவிட்டது.

எந்தச் சரித்திரக்காரனும் இந்தப் பெயரை எழுதாமல் தமிழக வரலாற்றின் அடுத்த வரிக்கு செல்ல முடியாது என்பது உறுதியாகிவிட்டது.

நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு மதியழகன் அவர்கள் அடிக்கடிக்கூறிப் பெருமைப்படுவதுபோல் — "நெஞ்சில் கருத்தலையும் கலை வெறியும் கொண்ட வாலிபராக கமலாலயக் குளத்தருகே இருந்து புறப்பட்டு வந்த இந்த காவிரிக்கரை இளைஞர்" — இன்று கடல் நிகர்த்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கன்னித் தமிழ் நாட்டிற்கும் கும் தலைவராகத் திகழ்கின்றார் என்றால், அவர் கடந்து வந்த காட்டாறுகளும், கடைப்பிடித்து வந்த கட்டுப்பாடும், கண்ணும் கருத்துமாக ஆற்றிவந்த கழகப் பணிகளும்தான் அதற்குக் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

உழைப்பு — அது சிந்திய வியர்வை!

தொண்டு—அது கொட்டிய ரத்த மழை!

செயல் — அது திரட்டிய நல்லெண்ணம்!

தியாகம்—அது சேர்த்த ஆதரவு!

தன்னல மறுப்பு — அது ஈட்டிய செல்வாக்கு!

குருபக்தி — அது தந்த தனிப் புகழ்!

படைக்கு முந்தும் குணம்—அது உருவாக்கிய நம்பிக்கை.

தோழமைப் பண்பு–அது குவித்த நல்லன்பு!

காலமறிந்த செயல்அது–நிறைந்த பாசம்!

தேர்தல் சாலகம்—அது உண்டாக்கிய கீர்த்தி!

பகை முடிக்கும் பாங்கு—அது மொண்டு தந்த வெற்றி!

பணி ஆற்றும் வேகம்—அது சித்தரித்த ஆளுமை!

அணி திரட்டும் வெற்றி—அது கொண்டு வந்த வலிவு!

இத்தனையும் கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமைக்குப் படிக்கற்களாக அமைந்தன என்பது அவரின் பொதுவாழ்வை உன்னிப்பாகக் கவனித்தவர்களுக்குத் தெளிவாகப் புலப்படும் உண்மைகளாகும்.

தரவேண்டிய விலைகளைத் தந்த பிறகுதான் கலைஞர்கருணாநிதி அவர்கள் பெறவேண்டிய தகுதியினைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்தச் சிறப்பு பொதுவாழ்வில் அவருக்குக் கிடைத்த 'சன்மானம்' என்று யாராவது எண்ணிக்கொண்டிருந்தால்—அவர் தம் சிந்தனை தற்கொலைக்கு தன்னை உட்படுத்திக் கொண்டது என்றுதான் பொருள்!

எனவே.........

பீடும் பெற்றியும் நிறைந்த அண்ணாவின் தலைமைக்கு ஈடும் இணையுமான கலைஞரின் தலைமை இன்று கழகத்திற்கு அமைந்துவிட்டது.

இந்த வாய்ப்பு கழகத்தின் எதிர்காலத்திற்கு என்று மட்டுமல்லாமல்—தமிழகத்தின் எதிர்காலத்தினைப் பற்றியும் ஒரு புது நம்பிக்கையினை உநவாக்கி விட்டது.

கீர்த்திமிக்க தலைவரின் முடிவிற்குப் பிறகு—அந்தத் தலைமை பீடத்தினை நிரப்புகின்ற தகுதிபற்றி—புகழ் பெற்ற சரித்திரக்காரன் ஆர்னால்டு டாயின்பீ ஒரு கருத்தை தெரிவித்திருக்கிறான்.

"முதன் தலைமையின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும், முதல் தலைமையின் அடி ஒற்றி செயலாற்றும் பக்குவம் பெற்றவராகவும்—தன்னைப் பதப்படுத்திக்கொண்டவர் எவரோ அவரே அதற்குரியவர்" என்பது அந்தக் கருத்து.

அந்த வகையிலும் நமது கலைஞர் அவர்கள் முறையான, நெறியான, சரியான தலைவராக வாய்த்திருக்கின்றார்கள்.

நினைவுத் துளிகள் நீரோடையாக மாறி என் கண்களை ஈரப்படுத்துகின்றன! கட்டுப்படுத்திக்கொள்கிறேன்.

பாரிஜாத மலரின் மணத்தை பக்கத்திலிருந்தே நுகர்ந்து மகிழ்ந்தவன் நான்—இன்று அந்த மலரின் சிறப்புப்பற்றி எழுத நினைக்கும்போது சிந்தனைகள் சிறகடித்து எங்கெங்கோ பறக்கின்றன.

கவனங்கள் சிதறி ஓடுகின்றன.

சேர்த்துப் பார்க்க முயல்கிறேன், முடியவில்லை.

கட்சி துவக்கியபோது என் கண்ணில் பட்ட அந்த மெல்லிய உருவம், கல்லில் செதுக்கிய சித்திரமாக என்கருத்தில் பதிந்துமிட்டது.

சொல்லெடுத்துச் சிலம்பாடும் அந்த திருக்காட்சி என் நினைவுகளிலே நர்த்தனமாடிக் கொண்டிருக்கின்றன.

பேனாவால் மீட்டிய வீணைகானங்கள் இதயத்திலே எண்ணச் சலனங்களை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றன.

என் கவனம் சரியென்றால்—நாற்பதுக்கும் குறையாத திரைப்படங்களுக்குக் கலைஞரின் கருத்தூற்றும் எழுதுகோல் உரையாடல்களைத் தீட்டியிருக்கின்றது.

உரையாடல்களா அவைகள்? ஒவ்வொருவரியும் நமது அமைப்பின் வளர்ச்சிக்காக கூட்டப்பட்ட மாநாடுகள் ஆயிற்றே!

"காயாத கானகத்தே நின்றுலாவும் காரிகையை" அழைத்துக் கொண்டிருந்த திரையுலகத்தை "வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு" என்று பாடவைத்த

# ANNOUNCEMENT

Enquiries are being received about the non-receipt of HOME RULE for the past four weeks. Due to circumstantial difficulties beyond our control, there has been delay in obtaining fresh declaration. Librarians, agents and readers are requested to take note that the weekly will soon be published from Kanchipuram.

Manager,
HOME RULE.

வலிமை மிக்க போர்வாள் ஆயிற்றே கலைஞரின் எழுதுகோல்!

அந்த எண்ணக்கோல் எத்தனையோ ஆயிரம் இளைஞர்களை கழகத்திற்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

அவரின் எழுதுகோல் ஆலகால விருட்சத்தின் கிளைகளை மட்டும் வெட்டவில்லை. அதன் ஆணி வேரையே பெயர்த்தெடுத்து வீழ்த்தியது.

"உத்திரவு கொடுங்கள் தாயே! உருத்தெரியாமல் ஆக்குகிறேன் இந்த ஊர் கெடுப்பவர்களை"!

இந்த உறுமல் எத்தனை இதயங்களை உலுக்கிற்று! எத்தனை உள்ளங்களை உறைய வைத்தது! எத்தனை நெஞ்சங்களை வீறுபெறச் செய்தது! எண்ணில் அடங்காதே!

"கண்ணிலே கண்ணீர் கையிலே குழந்தை! கல்யாணி அலைந்தாள்! கல்யாணிக்காக நான் அலைந்தேன்! கல்யாணிக்குக் கருணை காட்டினார்கள் பலர், அவற்றிலே காளையர் சிலர் கைம்மாறாக அவளது காதலைக் கேட்டனர்; பணம் மிரட்டியது ஓடினாள்! பகட்டு விரட்டியது மீண்டும் ஓடினாள்! பக்தி துரத்தியது பயந்தோடினாள்! ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்!"

இது கேட்ட திரையுலகம் மெய் சிலிர்த்து ஸ்தம்பித்து நின்றது. பஞ்சாங்க வித்வான்கள் பாயைச் சுருட்டிக் கொண்டனர்.

படத் தயாரிப்பாளர்களுக்கு 'கருணாநிதி' என்ற பெயரே வியாபாரத்திற்கான முதலீடாகிவிட்டது.

"ஏறினார் ஏறினார் வசனத்தின் உச்சாணிக்கே ஏறினார்!" என்று 'தினமணிக் கதிர்' எழுதி மகிழ்ந்தது.

"நாலு படங்களை தணிக்கைக் குழுவினரின் தலையீடில்லாமல் வெளியிட அனுமதிக்கட்டும் — பிறகு என்ன நடக்கிறது என்று பாருங்கள்!" என்று அண்ணாவைப் பேச வைத்தது கலைஞரின் எழுதுகோல்!

கருத்தா? கடல் அலையா? சொற் கூட்டமா? சூறைக் காற்றா? என திரையுலகத்தை கலைஞரின் சித்து விளையாடிய பேனா திக்கு முக்காடச் செய்தது.

அழுத கண்ணீரைத் துடைத்தது. அழுத்தக்காரர்களின் இதயத்தை உழுதது. அல்லற்பட்டோருக்கு ஆறுதல் கூறிற்று. நாதியற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டிற்று!

"கண்ணா! கண்ணா!" என்று கூவிக் கொண்டிருந்த கதா நாயகர்களை "அண்ணா அண்ணா!" என்று உச்சரிக்க வைத்தது.

இப்படி விந்தைகளைப் புரிந்த அவரின் எழுதுகோல் காட்டிய திசைநோக்கி அணி அணியாக, அலை அலையாக இளைஞர் கூட்டம் திரண்டு வந்தது,

பேச்சு மேடைகளையே புரட்சி நாடக மன்றங்களாக்கினார் கலைஞர்!

ஒன்பது சுவைகளும் அவர் ஏவலுக்கு அந்த மேடைகளிலே காத்து நின்றன.

'புயல் வீசும்! பூகம்பம் சிதறி வெடிக்கும்! தென்றல் சலசலக்கும்! தென்பாங்கு தாலாட்டும்!

கூட்டத்தினருக்கோ கைவலிக்கும், கர ஒலி எழுப்புவதால்! கண் வலிக்கும், இடை இடையே அழுவதால்! வயிறு நோகும் வாய் விட்டுச் சிரிப்பதால்! அவர் பேசி முடித்ததும் கூட்டத்தினரிடையே பகை எங்கே என்று தேடிவரும் வேகமும் விடுதலைத் தாகமும்தான் கொப்பளிக்கும்!

களச் செய்தியைவிட கலைஞருக்குக் களிப்பூட்டிய செய்தி எதுவும் கழக வரலாற்றில் இருந்ததாகத் தெரியவில்லை.'

"ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடிவந்த கோழையுள்ள நாடு இதல்லவே!" என்று குரல் எழுப்பி தமிழகத்திற்கு தன்னை அறிமுகப் படுத்திக்கொண்ட நாளிலே இருந்து — கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் வரையிலும் —கலைஞர் பங்கு பெறாத கழகப் போராட்டங்கள் எதுவும் இல்லை.

கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவெடுத்தது முதல் வெற்றியை அன்றி மற்றெதையும் அறுவடை செய்ததில்லை அவர்.

தமிழகத்தின் எந்தத் தொகுதியில் நின்றாலும் வெற்றியைமொண்டு வரக்கூடிய வல்லமை ஒருவருக்குண்டென்றால். அது என் ஆசான் கலைஞர் கருணாநிதிக்கே உரிய பெருமையாகும்,

பெயரில் மட்டும் 'நிதி'யைச் சேர்த்துக் கொண்டவரில்லை நம் கலைஞர், கழகத் தேர்தல் செலவுகளுக்கும் 'நிதி'யைச் சேர்த்துத் தருவதில் அவருக்கு இணை இன்று வரை அவர்தான்!

"'வெட்டி வா என்றால் கட்டி வருவான் என் தம்பி கருணாநிதி" என்று பூரிப்போடு அண்ணா அவர்கள் கூறி அகமகிழ்வார்களே, அந்த 'கட்டி வரும்' ஆற்றல் கலைஞருக்கென்றே அமைந்துவிட்ட கையிருப்பு ஆகும்!

தேர்தல் வித்தைகளில் புலி என்று தோடா போட்டுக்கொண்டு உலவிக் கொண்டிருந்தவர்களை — கிலி கொள்ள வைத்து ஓடி ஒளிந்து இருக்குமிடம் தெரியாமல் செய்கின்ற கலையிலும் நமது கலைஞருக்கு இணை கொடுக்க இன்று தமிழக அரசியலில் எவரும் இல்லை.

இப்படி......

அண்ணா இருந்தவரை தீப்பந்தமாக இருந்த கலைஞர்—அவர் மறைவிற்குப் பிறகு என் கண்களுக்கு தீபமாகத் தெரிகிறார்.

"ஆணையிடுங்கள் அண்ணா!" என்று கேட்டுக் கொண்டிருந்த நிலையிலே இருந்து 'ஆணை இட வேண்டிய நிலைக்கு" ஆளாகி இருப்பதால் காரம் குறைந்து சாரம் நிறைந்துவிட்டது.

பொறுப்புகளை மதிக்க வேண்டிய கடமை உணர்ச்சி அவரின் சுபாவங்களில் சுவை ஏற்றி வைத்துவிட்டது.

இந்த நாட்டுக்காகவும்—நாட்டை

(15-ம் பக்கம் பார்க்க)

# கல்வியும் கடமையும்!

—பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு—



'அறிவுடையார் எல்லாம் உடையார்' இது என் கண்டுபிடிப்பு அல்ல; வள்ளுவர் கண்டுபிடிப்பு; நெடுநாளைக்கு முந்திய கண்டுபிடிப்பு, ஆயினும் இன்றும் உண்மை; பொய் இழையாத உண்மை. இவ்வுண்மையினை அனைவரும் உணரவேண்டும். உணர்ந்தபின்? அறிவினைத் தேடவேண்டும். ஆசிரியர்களாகிய நாமும் மாணவர்களாக இருத்தல் தேவை. அறிந்த நாம், அறியாதவர்களையும் அறிவினைத் தேடும்படித் தூண்ட வேண்டும்.

அறிவினைப் பெறுவதெப்படி? கல்வியே, அறிவினைப் பெறும் வழி. மக்களுள் மறைந்து கிடக்கும் மதிநுட்பங்கள் பல; ஆற்றல்கள் பல. தன்மைகள் பல. விதையினைப் பயிராக்கி விளையவைப்பது பயிர்த் தொழில். மக்களுள் உறங்கிக் கிடக்கும் அறிவுக் கூறுகளைப் பயிராக்கி, நன்மைகளை விளைவிப்பது கல்வி.

கல்வியினை காலத்தே தொடங்கவேண்டும்; காலமெல்லாம் தொடரவேண்டும். ஐந்திலே எழுத்தறிவிப்பு அந்நாள் முறை. ஆட ஓடக்கற்றதும், 'பாலர் கூடம்' இந்நாள் தேவை. ஐந்து வயது வரையிலும் வீட்டிலே மடக்கிப் போடுவது நல்லதல்ல, பொருள்களைத் துருவ, பொருத்த, மாற்ற, அமைக்க முனையும் பருவமே கல்வி முனைக்கும் பருவம். எனவே ஐந்து வயதிற்கும் முன்னரே, பாலர் பள்ளிக்கோ, பாலர் வகுப்பிற்கோ அனுப்புவது நல்லது; அறிவு வளர்ச்சிக்குத் துணையாவது. பாலர் பள்ளியின் மூலம் கல்வியில் அடியெடுத்து வைத்தவர்கள் மற்றவர்களைவிட, கல்வியில் அதிகம் முன்னேறுவது அனைத்து நாடுகளின் பட்டறிவு. இதைப் புறக்கணித்தல் ஆகாது. பாலர் பள்ளிகள் பலப்பல தொடங்குதல் நல்லது. வறுமையுற்ற குழந்தைகளும் வருமாறு நடத்துதல் நல்லது.

குழந்தைக் காலத்தில் தொடங்கும் கல்வி முதுமைக் காலத்திலும் தொடரவேண்டும். ஏன்?

அறிவோ பெருங்கடல்; அறிவுக் கடலுக்குள் பாயும் வெள்ளமோ பெருவெள்ளம்; பலதுறைப் பெருவெள்ளம். இக்காலம், அறிவு புதை வாணம்போல் வண்ணக் களஞ்சியமாகும் காலம். நாள்தோறும் நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவோடு அறிமுகமாவது வேண்டாமா நமக்கு? அன்றாடம் வெளியாகும் அறிவோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கேற்ற வழி, தொடர்ந்து கற்றலே,

தேவை இப்படி! நிலைமை எப்படி?

ஏதோ ஒரு நிலைப் படிப்பை முடித்து நின்றுவிட்டவர்களில் பலர், படிப்பிற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறார்கள். அவர்களது அறிவு வளர்ச்சி தடைப்பட்டுவிடும். அவர்களது செய்தியும் எண்ணமும் 1940-ம் ஆண்டு இரயில்வே கால அட்டவணையாகிவிடும். அவை, இப்போதைக்கும் வரும் பொழுதுக்கும் பயனற்றவையாகிவிடும். எனவே, இந்நிலை மாறவேண்டும். இதை நாம், முயன்று மாற்றியாகவேண்டும். வகுப்புப் படிப்பை விட்ட இடத்திலும், நேரத்திலும் இருந்து 'தன் படிப்பு'த் தொடங்கி வளரவேண்டும். அதற்கான மனப்போக்கு வாய்ப்புகள் வசதிகள், சூழ்நிலைகள் ஆகியவற்றை வளர்ப்பது நம் நம் கடமை.

கல்வியைப் பெறும் முறைகளைச் சிறிது கவனிப்போம். காணுதல், கையாண்டு பார்த்தல், கேட்டல், ஐயங்களைக் கேட்டுத் தெளிதல், படித்தல் எழுதிப் பழகுதல், செய்தல், சோதனை செய்தல், சிந்தித்தல், வகுத்தல், தொகுத்தல் ஆகியவை கல்விகற்கும் முறை. நல்ல கல்வி இத்தனைக்கும் இடங்கொடுக்கவேண்டும், நிலைகளுக்கேற்ப, பாடங்களுக்கேற்ப இவற்றின் கலவை வேறுபடலாம். வேறுபடலாம். இத்தனையும் கலந்தால் மட்டுமே, நல்ல கல்வி, செறிக்கும் கல்வி பெறமுடியும். செறிக்கும் கல்வியே அடுத்தடுத்துக் கல்விப் பசியைக் கொடுக்கும். ஒழுங்கான பசியே, உடல் நலத்தின் அறிகுறி; கல்விப் பசியே, தொடர்கல்விப் பசியே ஏற்கனவே, பெற்ற கல்வியின் நலத்திற்கு அடையாளம்.

அத்தகைய நற்கல்வி கிடைப்பதற்கு அரும்பாடுபடவேண்டும். நாற்றரப்பினரின் ஒத்துழைப்பும் அறிவு நிறைந்த உழைப்பும் உதவியும் தேவை மாணவர், பெற்றோர், பொதுமக்கள், ஆசிரியர் — ஆகிய நான்கு தரப்பினரும் ஒருமனப்பட்டு ஒத்துழைத்து முயன்றால் நல்ல கல்வியினைப் பெறலாம்.

மாணவர், கருத்தாகக் கற்கவேண்டும்; கவலையற்றுக் கற்கவேண்டும். கவனச் சிதைவின்றி, கல்விக் கருமமே கண்ணாயிருந்து கற்கவேண்டும். மாணவர்களுக்கு இந்நிலை தானே வராது. பெரியவர்கள் இதற்கான மனப்போக்கை உருவாக்கவேண்டும். இதில் பெற்றோரின் கடமை பெரிது. பெற்றோரில் பலர் படிப்பில்லாதவர்கள்; ஆயினும் உலகியல் அறிவு உள்ளவர்கள். தங்களுக்குள்ள பெரும் பொறுப்பை அவர்கள் உணரவேண்டும். இக்காலத்தில் படித்த பெற்றோர்கள்கூட, போதிய அளவு தங்கள் மக்களுடைய கல்வியில் நாட்டம் செலுத்துவதில்லை. நல்லதோர் பள்ளியில் எப்படியோ சேர்த்துவிட்டால் தங்கள் கடமை முடிந்ததாகக் கருதுகிறார்கள். சில வேளை, ஓட்டப்பந்தயக் குதிரையை, கூச்சலிட்டு விரட்டுவதுபோல், மிரட்டிப் படிக்கவைக்க முயல்கின்றனர். தேர்ச்சிச் சீட்டுகளும் தேர்வு எண்ணுக்குமேல் எண்ணும் எப்படியோ பெறுவதே போதும் என்று எண்ணுகிற அவாவுகிற பெற்றோர் நாளுக்கு நாள் மிகுதியாகின்றனர். புத்தியைத் தீட்டுவதோடு ஆற்றலையும், செய்திறனையும், உடல்வலிமையையும், உள்ள ஊக்கத்

தையும், உள்ள உயர்வையும் செம்மையையும் இணைத்து வளர்க்கும் நற்கல்வியை நாடும் பெற்றோர்கள்—படித்தவர்களில்கூட—அரிதாகிருர்கள். எனவே கல்வி, மனிதனை வளர்ப்பதற்குப் பதில், எப்படியும் சீட்டுக் கொடுத்துத் தள்ளிவிடும் பயனற்ற படிப்பாகிவருகிறது. மலைமேலிருந்து உருண்டுவிழும் இந்நிலையை விரைவில் தடுத்து நிறுத்தவேண்டும். தெளிந்த பெற்றோராகிலும் கேடில் விழுச்செல்வம் கல்வியே யன்றி, தேர்வுச் சீட்டல்ல என்று உணர்ந்து, அதை வழங்கும் பொருட்டு, கல்விக்கூடங்களோடு ஒத்துழைக்க வேண்டும்; ஆசிரியர்களோடு ஒத்துழைக்க வேண்டும்.

சரியான கல்வி நுட்பப் பயிர். அது காட்டுப் பயிரல்ல, அதை வளர்ப்பதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. ஆசிரியர்கள், மாணவர்களின் கவனத்தைக் கல்வியின்பால் ஈடுபடுத்த முனையும்போது பொதுமக்கள் துணை நிற்காவிட்டால், அதற்கான சமுதாயச் சூழ்நிலையை உருவாக்கித் தராவிட்டால், ஆசிரியர்களின் பணி, விழலுக்கிறைத்த நீராகும்.

பருவத்திற்கேற்ற பயிர்; அதேபோல் வயதிற்கேற்ற ஈடுபாடு. மாணவர்களின் ஈடுபாடு கல்விக்கே; கவனமும் கருத்தும் கல்விக்கே. இவை வேறுபக்கம் சிதறிவிடுதல் கூடாது. அரசியல் கட்சிகளும், சமுதாயக் குழுக்களும், பொருளாதார முறையினரும், தங்கள் தங்கள் தொண்டுகளுக்காக மாணவர்களை இழுத்தால், அவர்களது கல்வி கெடும்; வாழ்வு கெடும்; நாட்டின் எதிர்காலம் கெடும். உலகப்போட்டியில் நாம் பின்னடைந்து விடுவோம். எனவே, பொதுவாழ்க்கைப் பெரியவர்களையெல்லாம் தலைவணங்கி வேண்டுகிறேன்; தயவுசெய்து மாணவர்களை மாணவர்களாகவே இயங்கவிட்டுவையுங்கள் என்று வளரத்துடிக்கும் இனத்தின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன். மாணவர்கள், கொள்கைச் சார்புடையவர்களாக இருத்தல் தவறல்ல, அப்போதைக்கப்போது வழிமாறும் அரசியல் மடிவுகளிலோ, பொதுவிவகாரங்களிலோ ஈடுபடுவது நாட்டின் எதிர்காலத்தைப் பெரிதும் பாதிக்கும். ஏற்கனவே உள்ள பலவகை வறுமைகளோடு கல்வி வறுமையினைச் சேர்த்து, நாட்டை மேலும் நலிவுறச் செய்யும்.

எத்துறையிலும் புரட்சி கடிது. அதைவிடக் கடிது புரட்சியால் ஏற்படும் புதுநிலைகளைச் சமாளித்து நல்லவையாகுல் நிலைபெறச் செய்து, வளர்த்து நாட்டையும் மக்களையும் முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்வது. முதியவர்கள் அரசியல் முன்னேற்றங்களுக்கும், சமுதாயச் சீர்திருத்தங்களுக்கும் பொருளாதாரச் சீரமைப்பிற்கும், தங்களை அர்ப்பணித்துக் கொண்டு, சிறுவர்களை, இளைஞர்களை, வாலிபர்களை கல்விக்கும் தொழிற் பயிற்சிக்கும் ஆளாக்கிவிடுவது அறிவுடைமையாகும். எதிர்காலத்திற்கும் பல்வேறு பொதுவாழ்வு இயக்கங்களுக்கும் ஆட்கள் வேண்டுமே—வேறு பல்வேறு பணிகளுக்கும் ஆட்கள் வேண்டுமே—இதை உணர்ந்ததால் அல்லவா, மாமேதை லெனின், இரஷ்ய புரட்சிக்குத் திட்டம் தீட்டும் போதும், மாணவர்களுக்கான தேசியப்பணி, 'படி படி, மேலும் படி' என்று வழிகாட்டினர். நம் தேசப் பிதா, அண்ணல் காந்தியடிகளும், மாணவர்கள் ஒரே நேரத்தில், மாணவர்களாகவும் அரசியல்வாதிகளாகவும் இருக்க முடியாது; இருக்கக்கூடாது' என்று வழிவகுத்தார். இவை நம் சிந்தனைக்குரியன; நாம் பின் பற்றுவதற்கானவை. எனவே பொதுமக்கள், தங்கள் செல்வாக்கினைப் பயன்படுத்தி மாணவர்கள் மாணவர்களாக இயங்கும்படி பார்த்துக்கொள்வார்களாக!

(29-5-70-ல் கோவை தமிழ்நாடு ஆசிரியர் கழகத்தில் பேசியது)


சமூக அமைப்பு மாற்றப்படவேண்டுமென்பதற்கான போராட்டங்கள் புதுப்புது வடிவ மெடுக்கின்றன!

தனி மனிதர்கள்கூட சமூகத்தின் ஆணிவேரையே அறுத்துவிட முடியும் என்று முன்வருகிருர்கள்—

யார் அவர்கள்?

தத்துவமேதை

**T. K. சீனிவாசன், M. P.**

அவர்கள் படைக்கும்

புதிய தொடர்கதையில் படிக்கப் போகிறீர்கள்!

12—7—70 முதல்

"காஞ்சி"யில் எதிர்பாருங்கள்.


## செவ்வானம்

(இலக்கியத் திங்களிதழ்)

ஆசிரியர் ஆ. கன்னிகா விலை 0-25

செவ்வானம் சிந்தனையைத் தூண்டும் இயல்பினது. அதுபோலவே தான் இந்தத் திங்களிதழும் நம்மைப் பல வழிகளிலும் சிந்திக்கத் தூண்டுகிறது. இப்பதிப்பின் 4-வது இதழில் திருக்குறளை மேலோட்டமாகத் தெரிந்துகொண்டு பேசத் தலைப்படுவோரால், அதன் இதயம் எப்படியெல்லாம் பாழ்த்தப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டிக் கண்டிக்கிறது தலையங்கம். சுவையான கவிதைகள் இருக்கின்றன. சிந்திக்கத் தூண்டும் சிறுகதை, வாழ்க்கை அவலத்தை எடுத்துக்காட்டுகிறது. அல்லி அரங்கம் என்ற பகுதியின் மூலம், பல்வேறு பிரச்னைகள் அலசப்படுகின்றன. முரண்பாடுள்ள கருத்துக்களைத் திரட்டி நமக்குள்ளேயே ஒரு மோதுதலை உண்டாக்கும் கட்டுரைகள் சுவையானவை மட்டுமல்ல—நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டியவையுமாகும். (இது காஞ்சிபுரத்திலிருந்து வெளிவருகிறது.)

—முத்துராமன்

## மிஸ்டர் அப்போலோ:

# காட்டிக் கொடுத்துட்டாங்களே சார்!

—சீயேயெம்—

பொழுது போகாமல் புழுங்கிக் கொண்டிருந்த மிஸ்டர் அப்போலோ, வானொலிப் பெட்டியைத் திருகினார். ஏதாவது திரைப் பாடல்களைக் கேட்கலாமென்று. அங்குமிங்குமாக முள்ளை நகர்த்திக் கொண்டே வரும்போது "தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் எந்த வேறுபாடும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்ற ஒலி மிதந்து வந்தது கேட்டு, அங்கேயே நிறுத்தி விட்டு. மேலே செய்தியைக் கவனிக்கத் தொடங்கினார்.

'நாமெல்லாம் இந்த நாட்டுக்கு உரிமையுள்ளவர்கள். இந்த நாட்டவராகவே ஆகிவிடக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று பொருள்படும்படியாக இலங்கை வானொலியின் வானொலிப் பேட்டி அமைந்திருந்தது. முழுமையாக அதனைக் கேட்டுவிட்டு, வானொலிக்குப் பேட்டியளித்தவரும், சிறிமாவோ பண்டார நாயகாவின் அமைச்சரவையில் ஒரு அமைச்சராக நியமிக்கப் பெற்றுள்ளவருமான ஒரு தமிழரைச் சென்று கண்டார். மிஸ்டர் அப்போலோவின் வருகையைப் புன்னகை செய்து வரவேற்ற அந்த அமைச்சர் "அந்தப் பேட்டிக்கு ஏற்பாடு செய்தபோதே எனக்குத் தெரியும், உங்களைச் சந்திக்க வேண்டியிருக்குமென்று!" என்றார்.

"அதிலே ஒண்ணும் தப்பில்லைங்களே! தமிழர் சார்பிலே, உங்களை மந்திரியா ஆக்கி இருக்காங்க. உங்களை மந்திரியா ஆக்கிக்கிட்டதின் மூலம், இலங்கையிலே உள்ள எல்லா தமிழர்களையும் தாஜா செய்திட்டதாக அந்த அம்மா நெனைச்சிக்கிட்டிருக்காங்க! அந்த நினைப்பு வீணாகாதபடிக்குத்தான் உங்க பேட்டியும் இருந்தது" என்றார் அப்போலோ.

"பாருங்க மிஸ்டர்நிருபர், நாமெல்லாம் ஒரு தாய் மக்களா இருக்க முடியலேன்னுதான், அது முடியற காரியமும் இல்லேங்கிறதுனாலே தான் நாமெல்லாம் ஒருத்தருக்கொருத்தர் சகோதர பாவத்தோடு பழகணும், நடந்துக்கணும்ன்னு, உலகத்திலே இருக்கிற பெரிய அறிவாளிங்கள்லாம் எடுத்துச் சொல்லி இருக்காங்க! யாரா இருந்தாலும் அறிவுரை சொல்லறதுங்கிறது ரொம்ப சீப் இன்சிடெண்ட்! அது மாதிரி நடந்துக் காட்டுறதுதான் ரேர்! இல்லைங்களா?"

"ஆமாமாம்! பிரதம மந்திரி சிறிமாவோ இருக்காங்களே! அவுங்க கூட இந்த இலங்கையிலே இருக்கிற அத்தனைப் பேரையும், தம் குழந்தைகளாகவேதான் பாவிக்கிறாங்க! ஒருதாய், தன்னோட குழந்தைக்கு எது பிடிக்கும்? எது பிடிக்காதுன்னு தெரிஞ்சித்தானே எதையும் செய்யிறா. இங்கே, தமிழ் சினிமாப்படங்களை, அவுங்க குழந்தைங்க யாரும் பார்க்கப்படாது. பார்த்துக்கெட்டுடப்படாதுங்கிறதுக்காகத்தானே, தமிழ்ப் படங்களின் இறக்குமதியையே குறைச்சுக்கணுனு ஏற்பாடு செய்திருக்காங்க! இந்த ஒரேயொரு நடைமுறையை மட்டும் எடுத்துக்குங்க! எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஓர் நிறை! நாம் எல்லாரும் இலங்கையர்களே என்பதைச் செயல்பூர்வமா ஆக்குகிற திட்டமில்லையா!"

"நீங்க இதிலே ஏதோ குறை காணறாப்போல தெரியுது! நீங்க நினைக்கிற மாதிரி......"

"நான் எதையும் நெனைக்கலே! நீங்க பேட்டிக் கொடுத்தீங்களே. இலங்கையிலே இருக்கிற தமிழர்களுக்கும், சிங்களவர்க்கும் எந்த வித்தியாசமும் இருக்கிறதா எனக்குத் தெரியலே; தமிழர்கள்கூட பலபேர் சிங்களம் படிச்சு, பரம்பரை பரம்பரையா வாழ்ந்து, அவங்களே சிங்களவர்களாகவும் ஆகி இருக்காங்க! அதுபோல சிங்களவர்கள்லேயும், பலபேர் தமிழரா ஆகி இருக்காங்க! இவுங்களுக்கிடையிலே என்ன வித்தியாசம் இருக்கு" அப்படின்னு கேட்டிங்களே! அது ஒரு சரியான கேள்வி! உங்களுக்குத் தெரியும்ன்னு நினைக்கிறேன் இந்தியாவிலே இப்போ நாகர்கள்ன்னு ஒரு இனம் இருக்குது. அந்த இனம் ஆதி தமிழர் இனமாகத்தான் இருக்கணும்னு சில ஆராய்ச்சியாளருங்க எடுத்துக்காட்டி இருக்காங்க! அந்த நாகர்கள் இனம்தான் புத்தர் காலத்துக்கும் முன்னதாவே இங்கே குடியேறி இருந்துதுன்னும், அந்த குடிகள்தான் இன்றைய சிங்களவர்கள்ன்னும் சிலபேர் சொல்லுறாங்க. அப்படிப்பார்க்கும்போது, நீங்க சொல்றபடியே தமிழர்களாத்தான் தெரியுது. அதனாலே எந்த வேறுபாடும் இருக்க நியாயமில்லைதானே! எதையும் எடுத்துக்காட்டவேண்டியதுதானே. இன்னொரு வரலாறு பாருங்க, இலங்கைக்கும் நாகைப் பட்டினத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு அந்த நாள்லேயும் இருந்தது. இந்த நாள்லேயும் இருக்குது. நாகையிலேயிருந்துதான் நாகர்கள் இலங்கைக்குக்குடியேறினதாகச் சொல்றாங்க! நம்பமுடிஞ்ச செய்திதான் இது! அதனாலே......"

"இந்தப் பழைய கதையெல்லாம் இப்ப எதுக்குக் கிளறுறீங்க?"!

"நீங்க வேறுபாடுஎதுவும் தெரியலேன்னு ஒட்டு மொத்தமாச் சொல்லிட்டீங்க! யாராவது என்னை மாதிரி பத்திரிகைக்காரன் வந்து உங்களை மடக்கிட்டா என்ன பண்றதுங்கிறதுக்காகத்தான் இந்த விவரங்களைச் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன். அதோட, இலங்கையிலே, ஏழாரன் காலத்திலேதான் ஒழுங்கான ஒரு அரசியல் அமைப்பும். அமைதியான ஆட்சியும் ஏற்பட்டது

'மிஸ்டர் அப்போலோ' பகுதியில் காணப்படும் கருத்துக்கள் எவரையும் புண்படுத்தும் நோக்கத்தோடு, அல்லது குறை காணும் நோக்கத்தோடு, தரப்படுவன அல்ல! இப்படியும் சில கருத்துக்களைப் பெற முடியும் என்பது தான்!

அதைப் பின்பற்றித்தான் இலங்கை, இன்னைக்கும் இருக்குங்கிறதையும் நீங்க தெரிஞ்சு வச்சுக்கிறது நல்லது இல்லையா?''

''இதெல்லாம் எனக்குத் தெரியுமே! எனக்கு வேண்டியதெல்லாம் வரப்போகிற இந்த ஐந்து வருஷ காலமும், எந்தக் குழப்பமும், தகராறும் இல்லாமல். தமிழரும், சிங்களரும் இருக்கணும்! அதுக்குத்தான் முதல் நடவடிக்கை எடுக்கணும்''

''உங்களுக்கு எதுவுமே தெரியாதுபோல இருக்கே! திருமதி பண்டா நேற்று என்ன செய்திருக்கார் தெரியுமோ! பழைய வெளியேற்றும் ஒப்பந்தம் என்ன நிலையிலே இருக்கு? எப்படி எப்படி செயல்படுதுங்கிறதைக் கேட்டு, உடனே அது தொடர்பான பைல்களைக் கொண்டு வந்து தன்கிட்டேக் காட்டணும்னு உத்திரவு போட்டிருக்கரூர் தெரியுமோ?''

''அந்த விஷயமெல்லாம் அந்த அம்மாவோட அரசாங்கக்கொள்கை. அதையெல்லாம் நாம கண்டுக்கப்படாது''

''கண்டுக்கப்படாதுதான்! ஏன்னு நம்மை தமிழருங்க அடையாளம் கண்டுக்குவாங்களே! நான் வரட்டுமா?''

''பதிலுக்காக நிற்கக்கூட்வில்லை. புறப்பட்டுவிட்டார்! இண்டிகேடு காங்கிரஸ்காரரான ராம்சுபாக் சிங்கைப் பற்றி நினைவுக்கு வந்தது! அரசாங்கக் கொள்கை என்று இலங்கை மந்திரி சொன்னதும், அந்த நினைவு ஏற்பட்டது. உடனே புறப்பட்டு வந்து சேர்ந்தார் பரமக்குடிக்கு! மாநாட்டை முடித்துக் கொண்டு அவசர அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தவரைத் தடுத்து நிறுத்தினூர் மிஸ்டர் அப்போலோ.

''நீங்க மந்திரியா இருந்தப்போ சந்தித்தது! ரொம்ப நாளாச்சு!'' என்ற முகமனுடன் அருகே வந்து நின்றூர் நிருபர்.

''ஆமாமாம்! மந்திரியா இருந்தேன்! நீவேற வந்து அதை ஞாபகப்படுத்தணுமா? நான் மந்திரியாவா இருந்தேன்? அந்த அம்மாகிட்டே அடிமையாலே இருந்தேன்! அப்பாடா, தலை அறுந்கதுன்னு இப்பல்ல இருக்கு'' என்றூர் மாஜி அமைச்சர் ராம்சுபாக்சிங்.

''உங்க ராஜினமாவை, உங்ககிட்டெ இருந்து கட்டாயப்படுத்தி வாங்கிக்கிட்டதா பேப்பர்லே பார்த்தேன்'' என்றூர் நிருபர்!

''பத்திரிகைக்காரன் எல்லாம் உன்னைப்போலதானேய்யா! கடுகுன்னு—கலியாண பூசணின்னு எழுதுவீங்க!''

''ஒத்துக்கிறேன்! ஆனால், இந்த பரமக்குடி மாநாட்டிலே, நீங்க கடுகுன்னுகூட பேசலேன்னு மறுக்க மாட்டீங்கல்லே! தலைவரே! இந்தியாவின் அணு ஆயுதக் கொள்கையைப் பத்த விளாசு விளாசுன்னு விளாசி இருக்கீங்க! வெளிநாட்டுக் கொள்கையைப் பத்திப் புட்டுப் புட்டு வச்சு இருக்கீங்க. எனக்கு ஒரு சந்தேகம் வந்துட்டுது.''

''பிரஸ்காரங்களுக்கு சந்தேகம் வரக்கூடாதே! அது ஆபத்துக்கு அறிகுறியாச்சே! என்ன சந்தேகம்?''

''நேருவுக்கு கவர்ண்மெண்ட் பாலிசிங்களை, வகுத்துக் கொடுத்தது ஒருவேளை இந்திராகாந்தியாக இருக்கலாமோன்னு சந்தேகம்!''

''நீ ஒண்ணுய்யா! நேரு ஒரு ஜனநாயக சர்வாதிகாரி! அவரு இதுக்கெல்லாம் இடம் கொடுத்து இருக்க மாட்டார்!''

''அப்போ, நேரு காலத்திலே இருந்த வெளிநாட்டுக் கொள்கை தானே இப்பவும் இருக்கு?''

''இருக்கு! இருக்கு! நீக்குப் போக்குத் தெரிய வேண்டாமா? இந்தோ சீனு பாய் பாய்ங்கிற மாதிரி ஏதாவது அட்ஜஸ்ட்மெண்ட் இருக்கா? சீனுவைப் பாருங்க! நம்மை, சவாலுக்குக் கூப்பிட்டுக்கிட்டிருக்காங்க. நம்ம தலைமேலேயே சீன ராக்கெட் சுத்திக்கிட்டிருக்குது. நாமும் தயார் நிலையில் இருக்க வேண்டாமா?''

''சரியான உண்மை! ஆனுல் லால்பகதூர் காலத்திலேயும், அவருக்கு முன்னுலே நேரு காலத்திலேயும் தெளிவாகவும், வெளிப்படையாகவும், இருந்த வெளிநாட்டு அபாயம், இப்ப அந்த அளவுக்கு இருக்குதா? அப்படி இருக்கிறதா நெனைக்கிறீங்களா? நேரு காலத்திலே, அணு ஆயுதத் தடை பற்றித்தான் பிரமாதமா பேசினீங்களே ஒழிய, ஒப்புக்குக்கூட அணுகுண்டு செய்யிறதைப் பற்றிப் பேசி இருக்கீங்களா?

''அப்போ பேசலேங்கிறதுக்காக இப்பப் பேசக்கூடாதா?''

''உண்மையான ஆபத்து இருந்தப்போ, அப்படிப் பேசலியேன்னு தான் கேட்கிறேன்!''

''இப்ப வெளி ஆத்பது எதுவுமில்லைன்னு நீங்க சொல்றீங்களா?''

''அப்படிச் சொல்லலை. வெளி ஆபத்து இருக்கு. அது நேரு காலத்தைவிட அதிகமா இல்லே''

''அதனுலே......''

''அணுகுண்டு விஷயத்தைப் போய் பிரமாதப்படுத்தி இருக்கீங்களே! இந்தியாவையே நீங்க காட்டிக் கொடுக்கிற மாதிரி இல்லே, இராணுவத்துறையிலே நாம ரொம்ப வீக்கா இருக்கோம்னு சொல்லிக் கொடுக்கிறமாதிரி இல்லே இது இருக்குது?''

''இந்திராவைப் பார்த்துட்டு. இங்கே வந்திருக்கீங்களா?

''இனினும் போகலே! அதுபற்றி முடிவுக்கும் வரலே! நேரு

11-ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்விக்கப் பாடுபடும் நமது கழகத்திற்காகவும் கழகத்தை நம்பியிருக்கும் நாலு கோடி தமிழர்களுக்காகவும் அவர் சுமந்தே தீரவேண்டிய பொறுப்புகளை இயற்கையான அரசியல் பரிணமம் அவரின் தோள்களில் தூக்கி வைத்திருக்கிறது. அதைச் சுமந்தபடி கலைஞரின் பணி தொடர்கிறது!

கண்ணீரில் உப்பிட்டு கலயத்து நீர் எடுத்து கஞ்சியை குடித்துக் கொண்டிருக்கிருனே இந்நாட்டு ஏழை—அவன் நம்புகிருன். ''கருணுநிதி எங்களை வாழவைப்பார்'' என்று!

அந்த நம்பிக்கைதான் கழக அரசின் நங்கூரம்!

அந்த நங்கூரம் அறுபடாத காலம்வரை கழக அரசு என்னும் கப்பலை அசைத்துப் பார்த்திடவும் இந்த மண்ணில் எந்த சக்திக்கும் துணிவில்லை, திறனில்லை!

இந்த மகிழ்ச்சி தரும் களிப்பிலே என் அண்ணனை — என் ஆசானை வாழ்த்திடக் கரங்குவிக்கின்றேன்.

கிளிக்குப் பச்சை பூசவில்லை கழுத்திற்கு பொன்மணி சூட்டுகிறேன்!

பாலுக்கு வெண்மை கூட்டவில்லை. சுவைக்கு சிறிது சீனிசர்க்கரை சேர்த்திருக்கிறேன்!

புலி உறுமும் நெஞ்சத்தை, பூ மணக்கும் உள்ளத்தை மனமகிழ்வால் நனைக்கிறேன்!

நிந்தனைக்கு வாடாமலரை வந்தனைக்கு ஆடா மயிலை வாயிற்படியில் நின்றபடி 'இந்நாட்டை வாழவைக்க நீங்கள் எந்நாளும் வாழ்க' என்று கரம் குவித்து வாழ்த்துகின்றேன். வணங்குகின்றேன்.

—(கலைஞர் மலரில்)

காஞ்சி 14-6-70 REGD. No. M. 8326

காலத்தைவிட இப்ப இராணுவச் செலவு அதிகம்!''

''இருக்கட்டுமே! இராணுவத் தொல்லையும் அதிகமில்லையா?''

''எல்லாமே அதிகம்தான்! அந்தக் காலத்திலே இருந்த எதிர்க் கட்சித் தொல்லையைவிட, இந்தக் காலத்து எதிர்க் கட்சித் தொல்லையும் அதிகம்தான்! பாவம் இந்திரா!''

''பாழும் இந்திரான்னு சொல்லுங்க! முதல்லே வீட்டுக் கனுப்பணும்!

''அது ஒண்ணுதானே உங்க கட்சி இலட்சியம்! அதுக்காகத்தானே இந்த மாநாடெல்லாம்!''

அப்போலோ பறந்துவிட்டார். எதிரே கம்யூனிஸ்டு தலைவர் ஏ. கே. கோபாலன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்து ஒரு திருப்தி. உருப்படியான ஒரு பேட்டி கிடைத்ததே என்று!

''வணக்கம் காம்ரேடு'' என்று கைகளைக் கூப்பி வணக்கம்செலுத்திவிட்டு, ''என்ன சௌக்கியமா?'' என்றார்.

''சௌக்கியமா இருக்கும்படியாவா நீங்க விட்டு வச்சி இருக்கீங்க?'' என்றார் அலுப்போடு.

''என்ன அப்படிச் சொல்லிட்டீங்க! இதுவரைக்கும் உங்க ஸ்டேட்லே நீங்களே ஆண்டீங்க. 7 வருஷத்துக்கு முன்னாலே வந்த நில வரம்புச் சட்டத்தின்படி, சர்க்கார் கிட்டே ஒப்படைக்க வேண்டிய மிச்ச நிலத்தைக்கூட நீங்க இதுவரையிலே சர்க்கார் கிட்டே ஒப்படைக்காமல் நீங்களே எஞ்சாய் பண்ணிக்கிட்டிருக்கீங்க. இருந்துமா இப்படிப் பேசறது?'' என்றார் வினயத்தோடு, மிஸ்டர் அப்போலோ.

''இப்போ எனக்கு அதுதான் கவலையாய்ப் போச்சு! நிலச் சீர்திருத்தம், நிலப் புரட்சின்னு இதுவரையில் பேசிக்கிட்டே இருந்தோம்! சூடாவும் சுவையாவும் அது இருந்துது! இப்போ, தமிழ் நாட்டிலே தி. மு. க, உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்துட்டுது. பயன் உண்டோ இல்லையோ, நிலச் சட்டம்ன்னு அவுங்க பேசிக்கிறதைத் தடுக்க முடியாது. அது மட்டுமல்ல ஏழங்களுக்குநிலம்ன்னு இனிப்பா பேசிக்கிட்டு வந்தோம்! அதையுங்கூட வீட்டு மனைன்னும், தரிசு நிலமின்னும் இலட்சக்கணக்கான பேருககுக் கொடுத்திருக்காங்க. கொடுத்துக்கிட்டும் இருக்காங்க! இந்த நேரத்திலே வலது சாரிங்க, நிலப் பறிமுதல் போராட்டம் நடத்துறதா அறிவிப்புக் கொடுத்திருக்காங்களேன்னு யோசிக்கிறேன். கவலையா இருக்கு.''

''நீங்க ஏன் கவலைப்படணும்! போராட்டம் கேரளாவிலே இல்லையே!''

''இருக்காதுன்னு சொல்ல முடியாதே! போராட்டம் நடத்துறது வலது கம்யூனிஸ்டு இல்லே! கேரளாவிலே வந்தாட்டுதுன்னு, என் மிச்சவரம்புஎன்ன ஆகுறது? மறந்து இருந்த எங்களுக்குக்கூட அந்த தி. மு க. மந்திரி மாதவன், நினைவு படுத்திப்பிட்டாரு.''

''நீங்களே அவுங்களுக்கு முன்னதா போராட்டம்ன்னு ஆரம்பிச்சுடுங்களேன்!''

''தமிழ்நாடு முதலமைச்சர் பேசி இருக்கிறார். இந்தப்போராட்டத்தைப் பற்றி தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் பயப்படவேண்டியதில்லை தான்! என் மிச்சவரம்பையெல்லாம் ஒருமாதிரியா செட்டில் பண்ணி இருக்கேன். அது அவுங்களுக்குத் தெரியும்னு தோணலே!''

''நல்லதாப்போச்சு! நிலப்பறிமுதல் போராட்டம் ஒரு இண்ட்ரஸ்டட் சப்ஜெக்ட் இல்லே!''

''இல்லே! ஏன்னா, நானும் ஒரு கம்யூனிஸ்டுதான் பாருங்கோ!''

''அப்பஇதுசம்பந்தமாக கல்யாண சுந்தரத்தைப் பார்க்கவேண்டியது இல்லை!''

''என் விஷயமா பார்த்துத் தொலையாதீங்க பாவம்! அவரே சில விஷயங்களிலே முதலமைச்சர் கருணாநிதிகிட்டே வசமா மாட்டிக் கிட்டிருக்கார்; ''அட்மினிஸ்டிரேஷன் எண்டர்பியரன்ஸ்''ன்னு பேசிப்புட்டு!

''ரொம்ப தாங்க்ஸ்!'' நான் வரட்டுங்களா?''

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு நிரந்தரமாக தீர்க்கப்பட்டிருக்கிறது.

காமராசரது தீர்ப்புப்படியும், கண்டுபிடிப்புக்களின் படியும் இதுவும்கூட தவறுதான்! தவறுதான் இது என்று மேடையேறி நின்று முழங்கத் தயாரா? காமராசருக்கு அந்த பேராண்மை இருக்கிறதா?

காங்கிரசாட்சிக் காலத்தைவிட பல்துறைத் தொழிலாளர்க்கும், ஊழியர்க்கும் ஊதியத்தில் உயர்வு ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது.

மறுக்கும் ஆண்மை காமராசருக்கு உண்டா? கொடுத்திருக்கக்கூடாது என்று காமராசர் கூறத் தயாரா?

காங்கிரசாட்சியை விட கல்வித் துறைக்கு இரு மடங்கு செலவிடப்படுகிறது பல ஆயிரம் ஆசிரியர்க்கு வேலை வாய்ப்புத் தேடித் தரப்பட்டுள்ளது. பல புதிய புதிய கல்லூரிகளும், பள்ளிக் கூடங்களும் உண்டாகி இருக்கின்றன,

இவையும் செய்திருக்கக்கூடாத தவறுதானே!

கிராமங்கள் அனைத்தும் மின்மயமாகிக் கொண்டிருக்கின்றன.

கூடாதா? பாபகாரியமா இது? இப்படியே அடுக்கிக் கொண்டு போனால் ஏடு இடம் கொள்ளாது.

மக்கள் தவறு செய்துவிட்டார்கள் என்று கூறுவதன் மூலம் இந்த முன்னேற்றங்களை, காமராசர் விரும்பவில்லை—கண்டிக்கிறார் என்றே பொருளாகும்!

காமராசருக்குத் துணிவிருக்குமானால், அவரது அடுத்த மாநாட்டில், இவைகளை மறுக்கட்டுமே!

தவறு செய்தவர்கள் யார் என்பது புலப்படும்; திருந்த வேண்டியவர்கள் யார் என்பதும் தெரிந்து விடும், அப்போது!

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3.